184

தொகுதி 10.] 1931௵ மார்ச்சு௴ 1௳ [பகுதி 2.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 4-பாகம் விலை ரூபா 8-4-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூடாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

10 APR 1931

அதைக்கேட்ட வேலப்பன் உள்ளத்தில் அதிக சந்தோஷமடைந்தவனாய், 'சரி, நல்லது' என்று கூறியதுடன், தனக்கு எவ்வளவுதான் கஷ்டங்கள் நேர்ந்திருந்தபோதிலும் அவைகளினின்றும் தப்புவதற்குரிய நம்பிக்கை இன்னும் இருக்கிறது என்றே நம்பினான். உடனே விசுவநாதன் வசூலித்துக்கொண்டு வந்த தொகையை எடுத்துத் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு தன் பிரத்யேக அறைக்குச் சென்று பலவாறு சிந்திக்கலானான். அப்போது அவன் தன் சிந்தனையின் பயனாக இரத்தினபுரியை விட்டு ஒரேயடியாக எங்கேனும் ஓடிச் சென்று தலைமறைவாக வசிப்பதென்று தீர்மானித்தான். அவ்வாறு ஓடிவிடுவதற்கும் அவனிடம் சிறுதொகையு மிருக்கிறதல்லவா? ஆகவே இன்னும் சிலமணி நேரங்களில் ஓடிவிடுவதென்று முடிவுசெய்தான். ஆனால் இவ்வளவு சிறிய தொகையுடன் ஓடிப்போய் எப்படிக் காலத்தைக் கழிப்பது? ஆயிரக்கணக்கான பவுன்களைச் சகஜமாகச் செலவுசெய்த அவனுக்கு நானூறு பவுன் எதற்குப் போதும்? எனவே அவன் இன்னும் அதிகமான தொகையைப்பெற முயற்சிசெய்தான். அவ்வாறு பெறுவதற்கு போர்ஜரி என்று சொல்லப்படும் கள்ளக் கையெழுத்து செய்வதைத் தவிர வேறுவழி யில்லையென்றும் கண்டான். ஆகவே சூதுவாதுகளில் தேர்ந்த அவன் நீண்டநேர யோசனைக்குப் பின்னர் தான் சில தினங்களுக்குமுன் லேவாதேவி செய்து கொண்டிருந்த ஒரு பெரிய வியாபாரக் கம்பெனியார் தனக்கு இருபது நாட்களுக்கப்பால் ஒரு தேதி போட்டுக்கொடுத்த மாதிரி ஒரு உண்டியலைத் தயாரித்து அதில் அக்கம்பெனி முதலாளியின் கையெழுத்தைப் போட்டுவிட்டான். அந்த உண்டியலைத் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டான். முதலில் கள்ளக் கையெழுத்து வெளியாயவிட்டால் கோர்ட் தண்டனைக்கு ஆளாக நேரிடுமே என்னும் அச்சம் சிறிது

186555

உதித்தது. எனினும் இத்தகைய விஷயங்களுக்கெல்லாம் அவன் சிறிதும் பயப்படுகிறவனல்ல. ஆகவே அவன் தைரியத்துடன் புறப்பட்டுத் தன் காரியாலய அறைக்குச் சென்று அங்கு ஆபீஸ் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த விசுவநாதனிடம், 'வீட்டுக்குப்போய் நாளை காலை வாரும்; இருவருமாகச் சேர்ந்து கணக்குகளை ஒத்திட்டுப் பார்ப்போம்' என்று கூறவே அவனும் ஆபீசை மூடிக்கொண்டு வெளியில் செல்ல முயன்றான். அச்சமயம் வேலப்பன் தனக்கு மிகவும் பழக்கமான ஒரு பாங்கிக்குச் சென்று அந்த உண்டியலை மாற்றிக்கொள்ள முயற்சித்தான். அது ஆயிரத்து ஐந்நூறு பவுன்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவன் அதைப் பாங்கியின் முதலாளிகளில் ஒருவரிடமே நேராகக் கொடுத்துப் பணமாக மாற்றிக்கொண்டான். உடனே அவன் மீண்டும் தன் காரியாலயம் வந்து சேர்ந்தான். இதற்குள் அவனுடைய குமாஸ்தாவாகிய விசுவநாதன் வெளியில் போய்விட்டானென்றாலும் அவன் வீட்டுக்குப் போய்விடாமல் தன் எஜமானனுடைய நடத்தைகளைத் திருட்டுத்தனமாகக் கவனித்துவரவே வெளியில் சென்றான். வேலப்பன் அவ்வறையில் தனியாக உட்கார்ந்துகொண்டு தன் ரிகார்டுகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் புரட்டிப் படித்துப்பார்த்துப் பல ரிகார்டுகளைக் கிழித்துவிட்டும் சில முக்கியமான ரிகார்டுகளைத் தன்னுடன் ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டும் இரவு சுமார் ஏழரை மணிக்குத் தன் மனைவியையும் மகளையும்கூடக் காணாமல், அவர்களை தனியாகவும், ஏழைகளாகவும் அலையும்படி விட்டுவிட்டு இரத்தினபுரியை விட்டு மறைந்துவிடும் எண்ணத்துடன் வெளியில் புறப்பட்டு ஒரு வாடகை வண்டியை அமர்த்திக்கொண்டு இரத்தினபுரிக்கு அடுத்த ஊர் ரயில்வே ஸ்டேஷனுக்குப்போய்ச் சேர்ந்தான். அவன் வாடகை கொடுத்துவிட்டு அந்த ஸ்டேஷனில்போய் நின்று வேறு

ஏதோ ஒரு ஊருக்குச் செல்லும் விஷயமாய் அங்குள்ள ஒருவரிடம் விசாரித்துக்கொண் டிருக்கையில் யாரோ ஒருவர் தன் தோள்மீது கைவைத்ததாக அறிந்தான். உடனே மெய்நடுங்கியது. எமனே கைவைத்ததுபோல் அஞ்சினன். திரும்பிப்பார்த்தபோது தன் குமாஸ்தா விசுவநாதனும், இரத்தினபுரி கோர்ட் அமீனவும், அவருடைய சேவகனும் எதிரில் நிற்பதைக் கண்டான்.

அவர்களைக் கண்ட வேலப்பன், முதலில் திகிலடைந்தா னாயினும், சமாளித்துக்கொண்டு தான் கள்ளக் கையொப்ப மிட்டு உண்டியல் மாற்றியது இதற்குள் வெளியா யிராதென் றும், வேறு எந்த கடன்காரருக்காகவோ இந்த உத்தியோ கஸ்தர்கள் வந்திருக்க வேண்டுமென்றும் அறிந்து தைரியத் துடன் அவர்களை நோக்கி என்னவென்று விசாரித்தான். அப்போது அவர்கள், வேலப்பனுடைய கடன்காரராகிய ஒரு வியாபாரியின் பெயரைச்சொல்லி அதற்காக மூவா யிரத்து ஐந்நூறு பவுன் தரவேண்டுமென்றும், அதைக் கொடுத்துவிட்டால் விட்டுவிடுவதாகவும், இன்றேல் உடனே கைதுசெய்வதாகவும் தெரிவித்தார்கள். அப்போது தன்னி டம் அவ்வளவு பெருந்தொகை இல்லாததைக் கண்டு அவர் களை அந்த ஸ்டேஷனுக்குச் சமீபத்திலுள்ள பெரிய விருட் சத்தினடியில் வந்து சாவகாசமாகப் பேசவேண்டுமென அழைத்துச் சென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டு மறுநாள் கோர்ட்டிற்கு வந்து பணத்தைச் செலுத்துவதாகவும், இப் போது அட்வான்சாக ஏதேனும் சொற்பதொகையைச் செலுத்துவதாகவும் கூறினன். ஆனல் பயன்படவில்லை. இறுதியில் வேலப்பனை நோக்கி, "வேலப்பா! நான் ஒரு சம யத்தில் உன்னை மன்னித்தேனல்லவா? அதுபோல இப் போது நீ என்னை மன்னித்து ஒரு வார்த்தையைச்சொல். நீ

சொன்னால் என்னை விடுதலை செய்துவிடுவார்கள்,'' என்று கேட்டுக்கொண்டான். ஆயினும் அவன் அதற்குச் சம்மதப் படவில்லை. உடனே கோர்ட் உத்தியோகஸ்தர்கள் வேலப் பனைக் கைதுசெய்து சிறைக்கு அழைத்துச் சென்றனர். எத்தனையோபேர் தனக்குக் கடன் கொடுக்கவில்லை என்பதற் காக அவர்களையெல்லாம் பிடித்து எந்த சிறைக்கு அனுப்பி னானோ அதேசிறையில் இப்போது அவன் இருப்பதைக் கண்டு மனம் வருந்தியவனாய்த் துக்கத்துடன் அடைபட்டுக் கிடந்தான்.

124 - வது அத்தியாயம்

பெரும் வட்டிக்குக் கடன் கொடுத்து ஏழைகளைத் துயரத்திலாழ்த்திய வேலப்பன் கதி இவ்வா ருக முடிந்தது. இதற்கிடையில் குமாரவேல்பிரபுவும் செல் லப்பப்பிரபுவும், தங்களுடைய காதலியும், அறிவிற் சிறந்த வளுமான மதனவல்லி கூறிய யோசனையின்படியே போலி யுத்தம் செய்து ஒருவருக்கும் ஆபத்து ஏற்படாதபடி அந்த யுத்தத்தை முடித்துவிட்டார்கள். இதனால் குமாரவேல் பிரபுவுக்கோ, செல்லப்பப்பிரபுவுக்கோ எத்தகைய ஆபத்தும் நேரவில்லை. ஆகவே அதன்பிறகு குமாரவேலும் இரத்தின புரியில் இருக்கப் பிரியப்படாமல் அயல்நாடு சென்றுவிட் டான். இப்போது நாம், நீண்டகாலமாக மறந்துவிட்ட, மிகப் பரோபகார சிந்தையுடையவனும், இளவரசிக்கு ஏற் பட்டிருக்கும் அவமானத்தினின்றும் அவளைப் பாதுகாப் பதற்காக உயிரைவிடவும் துணிந்திருப்பவனுமான ஜகதீச னைப்பற்றிக் கவனிப்போம். அவனை நாம் கடைசிமுறை பார்த்தது எப்போது என்பதை ஞாபகத்தில் வைத்துக்

கொள்ளுங்கள். அத்தை சுந்தராங்கியின் கடிதம் அவனுக்குக் கிடைத்தபடியால் அவன் கந்தபுரியினின்றும் இரத்தினபுரிக்கு வந்து சுந்தராங்கியைப் பார்த்ததுடன் அப்போது தான் செல்லப்பப்பிரபுவின் மாளிகையில் நடைபெற்ற பிரத்யேக நடனத்தையும் கண்டு, அங்கு மதனவல்லியைப் பார்த்து ஆச்சரியமடைந்து அவளுக்கும் ஒரு கடிதத்தை எழுதிவிட்டு இளவரசரையும் கண்டு பேசிவிட்டு இரண்டாவது முறையாக அத்தை சுந்தராங்கியையும் பார்த்து, அவளிடமிருந்து பரிதிபுரத்திலுள்ள, துயரக்கடலில் மூழ்கியிருக்கிற இளவரசிக்கு ஒரு கடிதம் வாங்கிக்கொண்டு அதை ரகசியமாகத் தன் சட்டைப்பையின் பின்புறத்திலேயே தைத்துக்கொண்டு மிக ஜாக்கிரதையுடன் இரண்டாவது முறையாகப் பரிதிபுரத்துக்குப் புறப்பட்டான்.

ஆனால், பெரியராணியும், மரகதவல்லியும் வேவுகாரர்களை விட்டு ஜகதீசனுடைய நடத்தைகளையெல்லாம் அறிந்துகொண்டேயிருந்தபடியால் இப்போது அவனைப் பின்தொடரும்படிவேவுகாரர் இருவரை அனுப்பினர். அவர்களும் ஜகதீசனுக்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அதை ஜகதீசன் அறியான். அவன் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது அவனைப் பின்தொடர்ந்தவர்கள் அவனைப் பலவழிகளிலும் கஷ்டங்களை விளைக்க முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்களின் யோசனையைக் கேட்டுத்தான் சில வண்டிக்காரர்கள் ஜகதீசன் கோரிய இடத்தில் அவனை விடாமல் வேறு ஒரு நகரத்தில் கொண்டு போய் விட்டுவிட்டார்கள். இதனால் அவன் பாஸ்போர்ட் இல்லாமல் அந்நகரத்தில் பிரவேசம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறையிலிடப்பட்டான். எனினும் அவன் சில மாதங்கள்வரை சிறையில் இருந்த பின்னர் அந்நகரில்

நேர்ந்த ஆட்சிமுறை மாறுதலின் பயனாக விடுதலையடைந்தான். அவன் சந்தோஷமடைந்து பரிதிபுரம் நோக்கிப் புறப்பட்டான். அவன் ஒரு வாடகைவண்டியை அமர்த்திக்கொண்டு போனபோது அவன் வழியில் தன் காரியத்தை எவ்வாறு சாதிக்கலா மென்பதைப்பற்றிப் பலவாறு சிந்தித்துக்கொண்டு சென்றான். இளவரசியைச் சுற்றிலும் வேவுகாரர்களும், விரோதிகளும் சுற்றிக்கொண் டிருப்பதையும் அவன் அறிவான். தான் இளவரசியை நேரில் காண்பதே சிரமமான காரியமாய்ப் போகுமென்பதையும் அறிந்திருந்தான். ஆகவே தான் மேற்போட்டுக்கொண்டிருக்கும் காரியத்தை எப்படிச் சாதிப்பது என்பதே அவனுடைய யோசனையாயிருந்தது. அவன் பகிரங்கமாகப் பரிதிபுரத்தில் செல்வதைவிட அந்தரங்கமாகவும் இரவிலும் அங்குசென்று தனியான ஓரிடத்தில் தங்கியிருந்து விஷயங்களைக் கிரகிப்பது சரியெனத் தோன்றியபடியால் வழியில் பரிதிபுரத்துக்கு மிக அருகில் இருந்த ஒரு சிறுகிராமத்திலேயே வண்டியைவிட்டிறங்கிவிட்டு அங்கிருந்த ஒரு சிறுவிடுதியில் புகுந்து பார்த்தான். அங்கே தன்னைப்போன்ற வேறொரு பிரயாணி அவ்விடுதியின் முதலாளியுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டான். அம்முதலாளியிடம், 'நான் மாலைவரை இக்கிராமத்தில் தங்கி இருப்பதாக உத்தேசித்திருக்கிறேன். நான் சிறிதுநேரம் சுற்றுப்புறங்களில் உலாவிவிட்டு வந்து எனக்காகச் சாப்பாட்டுக்குத் தரவேண்டிய கட்டணத்தைச் செலுத்திவிடுகிறேன்' என்று கூறினன். அதற்கு அவ்விடுதிக்காரர், 'இதோ இந்த கனவானும் இங்கேதான் இன்னும் சிலமணி நேரத்தில் சாப்பிடப்போகிறார். ஆதலின் நீங்களிருவரும் ஒன்றாகச் சாப்பிடுவீர்களென்று நினைக்கிறேன்' என்றான். அதற்கு இருவரும் மறுத்துப்பேசாமல் இருந்தனர். ஆகவே ஜகதீசன் தன் எண்ணப்படி வெளியில்சுற்றிவிட்டு வரச்சென்றான். மீண்டும் மாலை

5-மணிக்குத் திரும்பிவந்தான். அப்போது அந்த விடுதியின் வேலைக்காரியான ஒரு யௌவனமாது அவனை மிக மரியாதையுடன் வரவேற்று ஆகாரம் அளிக்கப்படும் அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே பகலில் விடுதிக்காரருடன் பேசிக்கொண்டிருந்த கனவானும் தயாராக இருந்தார். சாப்பிடும்போது அவர்களிருவரும் பலவித விஷயங்களைப்பற்றிச் சம்பாஷிக்கலானர். அப்போது அவர் பரிதிபுரத்தைச் சேர்ந்தவரென்றும், ஏதோ ஒரு காரியமாக அக்கிராமத்துக்கு வந்தாரென்றும் தெரிந்தது. ஜகதீசனும் தான் இரத்தினபுரியைச் சேர்ந்தவனென்றும், ஏதோ ஒரு பிரத்தியேக காரியமாக பரிதிபுரத்துக்கே செல்வதாகவும், சொற்பகாலம் தான் அங்கு தங்கியிருக்கப் போவதாகவும் தெரிவித்துவிட்டு இரத்தினபுரி இளவரசியின் சமாசாரம் ஏதேனும் அவருக்குத் தெரியுமா என விசாரித்தான். அப்போது அந்த பரிதிபுரக் கனவான், ஜகதீசன் இளவரசிக்குச் சம்பந்தப்பட்ட காரியமாகத்தான் வந்திருக்கவேண்டுமென ஒருவாறு யூகித்துக் கொண்டான். பிறகு அவர்களிருவருக்குமிடையில் இளவரசியைப் பற்றியும் அவளது பரிவாரங்களைப்பற்றியும் சம்பாஷணை நிகழ்ந்தது. பிறகு அக்கனவான் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச்சென்றான். ஜகதீசன் விடுதிக்காரரை யணுகி அந்த ஆள் யாரென்று விசாரித்ததில் அவன் தனக்குத் தெரியாதென்று தெரிவித்துவிட்டார். ஜகதீசன் மற்றொரு முறை சுற்றுப்புறங்களில் சுற்றிவிட்டுப் பிறகு பரிதிபுரம் புறப்படுவதாக விடுதிக்காரரிடம் சொல்லிவிட்டு வெளியில் புறப்பட்டான். அவன் இருட்டாவதற்குமுன் பரிதிபுரம் செல்ல விரும்பவில்லை யென்றாலும், அவன் தான் சாதிக்கப்போகும் காரியங்களைப்பற்றியும், பின்னர் விரைவில் இரத்தினபுரிக்குத் திரும்பிச் சென்று கோமளவல்லியை மணந்துகொள்ளப் போவதையும் பற்றிச் சிந்தித்துக்கொண்டே அங்குள்ள

இயற்கை அழகுகளையும், இதா வேடிக்கைகளையும் பார்த்துக் கொண்டே சென்றதில் அவனுக்கும் தெரியாமல் அவன் அக் கிராம எல்லையைக் கடந்து பரிதிபுரம் எல்லையில் சென்றுவிட் டான். அப்போது அங்கு ஒரு அழகான ஏரி காணப்பட்டது. அதன் கரையில் நின்றுகொண்டு நான்கு பக்கங்களையும் சுற் றிப் பார்த்தபோது சூரியன் அஸ்தமிக்கும் சமயமாயிருந்த தைக் கண்டான். அப்போது யாரோ ஒருமாது ஏதோ விசா ரத்துடன் பற்பலவிதமாகப் பிதற்றிக்கொண்டிருக்கும் சத்தம் அவன் காதில்கேட்டது. ஆகவே அதை அவன் உற்றுக்கேட் டான். பிறகு அச்சத்தம் எந்தத் திக்கிலிருந்து வந்ததோ அங்கே சென்று பார்த்தான். ஒருமாது நின்றுகொண்டு விச னத்துடன் கண்ணீர்விட்டழுவதைக் கண்டான். அவன் எதி ரில் சென்றால் என்ன அசந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி அதிக தூரத்தில்நின்று அவளைப் பார்த்துக்கொண் டிருந்தான். திடீரென்று அம்மாது அந்த ஏரியில் விழுந்து மூழ்கிய சத்தத்தையும், அவளது உடை நீர்ப் பரப்பின்மீது தேங்குவதையும் கண்டான். உடனே சிறிதும் யோசியாமல் திடீரென்று ஏரியில் பாய்ந்து அந்த ஆடையைப்பற்றி இழுத்து அம்மாதைக் கரைசேர்த்தான்.

அப்போது அவளுடைய உயிர் போய்விடவில்லையென் றாலும் அவள் அச்சத்தாலும், ஆயாசத்தாலும் களைப்படைந் திருந்ததால் உடம்பெல்லாம் வியர்த்தது. அவளுக்கு எவ்வ கையில் உதவிசெய்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை. அவளுடைய ஆடையில் எதையேனும் கிழித்துக் காற்றை உள்ளே புகுத்தவிடலாமென்றாலும் அவனுக்குச்சங்கோசமா யிருந்தது. எப்படியிருப்பினும் அவளைக் காக்கும்பொருட்டே அவ்வாறு செய்வதால் பாதகமில்லையென நினைத்து அவள் ஆடையைத் தொட்டபோது அம்மாதும்திடீரென்று மூர்ச்சை

தெளிந்து எழுந்து 'ஐயா, என்னகாரியம் செய்தாய்?' என்று கூறிக்கொண்டே எழுந்து ஓடிப்போய் மீண்டும் ஏரியில் குதித்தாள். அதிர்ஷ்டவசமாக அப்போது சந்திரனும் முழுப் பிரகாசத்துடன் புறப்பட்டுவிட்டபடியால் அந்த வெளிச்சத்தில் ஜகதீசன் அவள் குதித்த இடத்தை அறிந்துகொண்டு அதே இடத்தில் பாய்ந்து அவளுடைய தலை மயிரைப்பற்றி இழுத்து மீண்டும் கரைசேர்க்க முயன்றான். ஆனால் அவள் அவனிடமிருந்து விலகிக்கொண்டு அந்த ஏரியில் தற்கொலை செய்துகொள்ளத் தன்னாலானவரை முயன்றாள். எனினும் அவன் அதை லட்சியம்செய்யாமல் அவளைக் கரை சேர்த்தான். அப்போது அவள், 'ஐயா, நான் உனக்கு வந்தனம் செலுத்தமாட்டேன். நான் வேண்டுமென்றே உயிரைவிட முயற்சிக்கும்போது நீ என்னை மீட்பதனால் என்ன பிரயோசனம்?' என்றாள். அதற்கு அவன், 'ஓ மாதே! நீ பேசுவதைப் பார்த்தால் நீயும் இரத்தினபுரியைச் சேர்ந்தவளென்றே தெரிகிறதே. நீ இவ்வாறு பேசுவது தவறு,' என்றான்.

அப்போது அவள், ஜகதீசனுடைய நன்னடத்தையைக் குறித்து மிகச் சந்தோஷ மடைந்தவளாய், "ஐயா, என்னை மன்னித்துவிடு. எனக்காக நீ இருமுறை உன் உயிர் துறக்கவும் முன்வந்ததற்காக நான் எப்படிப்பட்ட கைம்மாறு செய்யாமற்போனாலும் என் வந்தனத்தையாவது செலுத்துகின்றேன்" என்று கூறினாள். இதற்குள் அவன் அவளைக் கரைக்கப்பால் சிறிதுதூரத்தில் எடுத்துச் சென்று படுக்கவைத்தான். அவன் அவள் முகத்தில் நல்லகாற்று வீசும்படியாக அவளைப் படுக்கவைத்ததுடன் அவளருகில் உட்கார்ந்து ஆறுதலையும் கூறிவந்தான். எனினும் மறுபடியும் அவள் எழுந்துபோய் ஏரியில் குதித்துவிடுவாளோ என்றும் அஞ்சினான். இதற்கிடையில் அவன் அவளது உருவத்

தையும் தோற்றத்தையும் கவனித்துப் பார்த்து அவள் ஏதோ உயரிய அந்தஸ்தில் இருந்தவளே என்று நிச்சயித்தான். அவள் மிக்க அழகானவளாகவும், யௌவனம் வாய்ந்தவளாயும், சுமார் இருபத்தேழு வயதானவளாயும் இருந்தாள். அப்போது அவள் பிரக்ஞை யடைந்து, "ஐயா, வருத்தம் அதிகரித்து அதனால் பைத்தியம் பிடித்தவளாக நான் இக் காரியத்தைச் செய்துவிட்டேன், என்னை உலகம் என்ன நினைக்குமோ, நீ என்ன நினைக்கிறாயோ?'' என்று கேட்டுக் கண்ணீர்விட்டு அழுதாள். அப்போது ஜகதீசன் கருணையுடன் கூடிய தொனியில் "மாதே! நான் மிக்க கண்ணியமாக நடந்துகொள்பவன். நான் இதைப்பற்றி யாரிடமும் உன் அனுமதியின்றிச் சொல்லமாட்டேன். நான் என்ன நினைப்பேனோ என்று கேட்கிறாய். நான் எப்போதுமே பிறரைப்பற்றிக் கண்ணியமாகத்தான் நினைப்பது வழக்கம். உலகம் உன் ரகசியத்தை யறிந்தாலல்லவோ உன்னைப்பற்றி ஏதேனும் நினைக்கப்போகிறது'' என்றான். ஜகதீசன் இவ்வாறு கூறியதைக் கேட்ட அம்மாது, "ஓ, தாராளகுணமுடையவனே! நீர் எனக்கு நம்பிக்கையை அளித்தாய்; தைரியத்தை யளித்தாய்; இங்கிருந்து போவோம் வா. நீ என்னுடன் நான் தங்கியிருக்கும் இடத்துக்கே வரவும், உனக்கும் வேறு ஆடை அளிக்கச் சொல்கின்றேன். ஆனால் இப்போது நடந்த சம்பவம் தற்செயலாக நடந்ததே யொழிய நானாக வேண்டுமென்று தற்கொலை செய்துகொள்ளப் பிரயத்தனப்படவில்லை என்று கூற ஞாபக மிருக்குமல்லவா?'' என்றாள்.

அதற்கு ஜகதீசன், "அம்மையே! நான் உன்னைக் காட்டிக் கொடுத்துவிடமாட்டேன். நீ யார் என்றுகூட நான் அறிந்துகொள்ளாம லிருக்கும்பொருட்டு இப்போதே உன்னை விட்டுப் பிரிந்துவிட வேண்டுமென்று கூறினாலும் அப்படியே

போய்விடத் தயாராக இருக்கிறேன்'' என்றான். அப்போது அவள், ''ஐயா, நீ எவ்வளவு தைரியமுள்ளவனாயிருக்கிறாயோ அவ்வளவு காருண்யமுள்ளவனாகவும் இருக்கின்றாய். உன் ஏற்பாடுகளில் நான் தலையிடவில்லை யென்பதாக இருந்தால் நீ அவசியம் என்னுடன் வந்து தங்கிவிட்டுப் போகவேண்டும். உன்னை இப்படித் தலைமுதல் கால்வரை ஈரத்துடன் அனுப்பமுடியாது. நான் இன்னாளென்று உனக்குத் தெரியாத வண்ணம் மறைக்கவேண்டுமென்றால் மறைப்பது கஷ்டமல்ல. நான் இப்போது பரிதிபுரத்தில் ஒரு தனியான இடத்தில் மாறுபெயருடன் தங்கி யிருக்கிறேன். என் விஷயங்களை யெல்லாம் உன்னிடம் சொன்னாலும் சொல்லக் கூடும். ஏனெனின், நீ எனக்குச் செய்த நன்றிக்கு நான் எதைத்தான் உன்னிடம் சொல்லக்கூடாது? உண்மையில் ஒரு சகோதரி தன் சகோதரனை நேசிப்பதுபோல் நான் உன்னை நேசிக்கின்றேன்'' என்றாள்.

இவ்வாறு பேசிக்கொண்டே அந்த மாதும் ஜகதீசனுமாகப் பரிதிபுரம்நோக்கிச் சென்றார்கள். அவர்கள் இருவரும் சென்றது பார்ப்பதற்கு ஆச்சர்யமாயிருந்தது. ஏனெனின் இருவரும் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் ஈரத்துடன் இருந்ததோடு அம்மாதின் கூந்தல் அவளுடைய தோள்களின்மீது விழுந்து புரண்டுகொண்டிருந்தது. ஆனால் அவர்களை அதிர்ஷ்டவசமாக யாரும் பார்க்கவில்லை. அவர்கள் இருவரும் கடைசியில் ஒரு சந்திலுள்ள வீட்டினருகில் சென்றபோது அம்மாது ஒருமணியை இழுத்தாள். அப்போது யாரோ ஒரு மனிதன் சிறிய விளக்குடன் வந்து கதவைத் திறந்தான். அம்மனிதனைக் கண்டதும் ஜகதீசன் ஆச்சரிய மடைந்தான். ஏனெனின் அன்றுமாலை அடுத்த கிராம விடுதியில் தன்னுடன் சாப்பிட்ட மனிதனே அவன்.

125 - வது அத்தியாயம்

கதவைத் திறக்க வந்த மனிதனும், ஜகதீசனைக் கண்டு அவன் தன்னுடன் அன்று மாலை கிராமவிடுதியில் சாப்பிட்டவன் என்பதை உணர்ந்தான். இவர்களிருவரும் இவ்வாறு ஒருவரையொருவர் அறிந்துகொண்டார்கள் என்பதைக் குறிப்பால் அறிந்த அம்மாதும் ஆச்சரியப்பட்டாள். ஆகவே உடனே அவள் ஜகதீசனைப் பார்த்து, 'ஐயா, உனக்கு இந்த டாக்டர்-மணவாளன் தெரியும் போலும்' என்று கேட்டாள். அதற்கு அவன், 'இன்று மாலை பக்கத்துக் கிராமவிடுதியில் நாங்களிருவரும் நன்றாகச் சாப்பிட்டோம். ஆனால் அப்போது அவருடைய பெயர் இன்னதென்றுவது மறுபடி இவ்வளவு விரைவில் இருவரும் சந்திப்போமென்றுவது நான் நினைக்கவில்லை' என்றான். அச்சமயத்தில் டாக்டர் மணவாளன், 'நாம் அனைவரும் ஒருவரோடொருவர் சம்பந்தப்பட வேண்டுமென்பது இறைவன் விருப்பம்போலும். அதன்படி நான் இதோ தங்களை என் வீட்டில் வரவேற்கின்றேன். இன்றுபகல் நான் தங்களை இன்னாரென்று அறியாததால் அழைக்கவில்லை. அதிருக்கட்டும்; இதென்ன ஆச்சர்யம்? நீங்கள் இருவருமே ஈரத்துடன் இருக்கிறீர்களே! இதைப்பார்த்தால் ஏரியில் நீங்கள் எதற்காகவோ மூழ்கியிருக்கவேண்டும்போல் தெரிகிறது'' என்றான்.

அப்போது அம்மாது மிக அவசரத்துடன், "ஆம்; நான் தற்செயலாய் ஏரியில் விழுந்துவிட்டேன். அப்போது அங்கே தோன்றிய இவர் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் என்னைக் காப்பாற்றினார். ஆகையால் நான் அவருக்குக் கட

மைப்பட் டிருக்கிறேனல்லவா; நீர் ஏதேனும் வேறு ஆடையை அவருக்கு அளிக்கவேண்டும்'' என்றுகூறினள். அதற்கு டாக்டர், "அப்படியானல் ஒரு நிமிஷமும் வீணுகக் கழிய லாகாது. வேறு உடைமட்டு மல்ல, நல்ல படுக்கையும் உனக்குக் கொடுக்கப்படும் ஐயா'' என்று ஜகதீசனைப் பார்த்துச் சொன்னுன். பிறகு வேலைக்காரி அம்மாதை வேறு அறைக்கு அழைத்துச் சென்றுள், டாக்டர் மணவாளன் ஜகதீசனை மாடி அறைக்கு அழைத்துச் சென்று வேறு ஆடைகளைக் கொடுத்தான், பிறகு டாக்டர் அவனை கீழே ஒரு அறைக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டியளித்தான். ஒரு மேஜையில் ஆகாரம் பரப்பப்பட்டிருந்தது. அவர்களிருவரும் சிற்றுண்டி அருந்தினர். அப்போது டாக்டர், ஜகதீசனைப் பார்த்து, "இந்தச் சம்பவம் எப்படிநடந்தது என்பதை இப்போது கூறவேண்டும்'' என்றுன்.

ஜகதீசன்:—பக்கத்துக் கிராமத்தில் சந்தித்த நாம் இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தபின்னர் நான் சுற்றுப் புறங்களின் அழகைக் கவனித்துக்கொண்டே உல்லாசமாக நடந்து பரிதிபுரத்துக்கருகில் அணுகி விட்டேன். சூரியன் அஸ்தமித்ததும் அப்போது எனக்குத் தெரியவில்லை. பிறகு நான் அங்கிருந்த ஏரிக்கரையின்மீது நின்று செவ்வானத்தின் அழகைக் கவனித்துக்கொண்டிருந்தபோது ஏரியில் எதுவோ விழுந்த சத்தமும், அது குடகுடவென்று மூழ்கும் சத்தமும் எனக்குக் கேட்டது.

மணவாளன்:—ஆ; நான் தெரிந்துகொண்டேன். என் வீட்டில் தங்கியிருக்கும் அம்மாதுக்கு மாலை நேரங்களில் காற்று வாட்டத்தில் நடப்பதில் பிரியமதிகம். இன்று அவள் அவ்வாறு சென்றபோது ஏரியில் தவறி விழுந்து

விட்டாள்போலும்! ஏரியில் சில இடங்களில் மிக ஆழமும் அபாயகரமுமான சுழலும் இருக்கின்றது. நீ அவளைத் தப்புவித்தாய்போலும்! அப்படியானால் நீ பரிதிபுரத்தில் இன்னும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கவில்லையோ?

ஜக:—இல்லை; இப்போது நானும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். கிராமவிடுதிக்கு நான் நீண்ட நேரமாகச் செல்லாமலிருந்ததிலிருந்தே அங்கு ஒருவகை பரபரப்பு ஏற்பட்டிருக்குமல்லவா? அவ்விடுதிக்காரன் எனக்கு எதுவோ ஆபத்து நேர்ந்துவிட்டதோ அல்லது நான் வேண்டுமென்றே எங்கேனும் ஓடிப்போனேனோ என்றும் கருதக்கூடும்.

மண:—நான் என் ஆளை அவ்விடத்துக்கு அனுப்பி நீ சொல்லும் செய்தியைச் சொல்லிவிட்டு வரச்சொல்கிறேன். நீ இன்றிரவை என் வீட்டிலேயே கழிக்கலாம்.

ஜக:—நான் அப்படியே செய்வதில் ஆட்சேபமில்லை. நாளைய தினமாவது எனக்கொரு தனியான இடத்தை இவ்வூரில் அமர்த்திக் கொடுப்பாயோ? நான் சில பிரத்யேக காரியங்களைக் கவனிக்கவேண்டியவனாயிருப்பதால் ஒன்றிரண்டு தினங்களேனும் மறைவாகவும் தனியாகவும் வசிக்கநேரிடும்.

மண:—அவ்வாறாயின் உனக்கு அமைதியாகவும், ஒரு புறமாகவும் இருக்கின்ற விடுதி வேண்டும்போலும்! அவ்வுடன் ஜனங்கள் உன்னைச் சூழ்ந்துகொள்ளாமலிருக்க வேண்டுமல்லவா?

ஜக:—ஆம்; அப்படிப்பட்ட இடம்தான் வேண்டும். அதாவது பிரத்யேகமான இடமாகவும், என்னைப் பொது

ஜனங்கள் அடிக்கடி காணமுடியாத இடமாகவும் இருக்க வேண்டும்.

மண:—அப்படியானல் என் வீட்டிலேயே உனக்கென ஒரு இடத்தை ஒதுக்குவேன். எனினும் ரமாமணி அம்மாளைக் கேட்கவேண்டும். ஏனெனின் ஒருவர் என் வீட்டில் தங்கியிருக்கும்போது அவருக்கு அசௌகரியம் ஏற்படும்படியாக மற்ருெருவரை நான் இங்கே வைத்துக்கொள்ளும் வழக்கமில்லை. மேலும் பெண்கள் இருக்கும்போது ஆண்களைச் சேர்ப்பதில்லை.

அப்போது ஜகதீசனுல் ஏரியினின்றும் காப்பாற்றப் பட்ட அம்மாது அவ்வறையில் வந்ததால், "ஆ; என்னைப் பற்றி என்ன பேசுகிறீர்கள்?" என்ருள். அவள் தன் ஈர உடைகளுக்குப் பதிலாக வேறு ஆடைகளை அணிந்திருந் தாள். அவள் உண்மையிலேயே மிக்க ரூபவதியானவளா யிருந்தும் ஏதோ விசனத்துடன் இருக்கிருள் என்பதுமட்டும் அவளது முகக்குறியால் தெரிந்தது.

அச்சமயம் டாக்டர் மணவாளன், "மாதே! உனக்கு ஆட்சேபமில்லாவிட்டால் இந்தக் கனவானையும் ஒன்றிரண்டு நாட்கள் வரை இங்கேயே தங்கியிருக்கும்படி கேட்கலா மென்று யோசித்து அதையும் அவரிடம் தெரியப்படுத்தி னேன்" என்ருன். அதற்கு அம்மாது, "இன்று மாலை நேர்ந்த சம்பவம் நேர்ந்திராவிட்டால் நான் சம்மதிக்கத்தான் மாட்டேன். ஆனுல் அவரிடமிருந்து நான் பெற்ற நன் மைக்கு நான் எப்படி அவர் விஷயத்தில் மறுக்கமுடியும்" என்ருள்.

அப்போது டாக்டர், "ஆம்; அதை நானும் அறிவேன். நீ உயிரைத் துறந்திருக்கவேண்டிய வேளையில் உனக்குத்

துணைபுரிந்த இவரை நீ வேண்டாமென்று சொல்லமாட்டாய் என்பதை நான் அறிவேன். மேலும் அவர் உன் தேசத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கிறார். ஆதலின் அவரை உனது நேசராகக் கொள்வதே தகுதியானது" என்று கூறினான். அதற்கு அவள், "ஆம்; நானும் அப்படித்தான் கருதுகின்றேன். நாங்களிருவரும் ஒரே தேசத்தைச் சேர்ந்தவராதலால்தான் நமக்குள்ள நேசம் அதிகரிக்கின்றது" என்றாள்.

அச்சமயம் ஜகதீசன் தன் பெயர் இன்னதென அறிவித்தபோது ரமாமணி என்னும் மாறுபெயரால் அங்கிருந்து வந்த அம்மாது மிக ஆச்சர்யத்துடன் அவனை உற்று நோக்கினாள். ஆகவே ஜகதீசன், "நீ என்னை அறிவாயோ?" என்று கேட்டான். அதற்கு அம்மாது, "ஆம்; ஜகதீசன் என்னும் பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுமட்டு மல்ல; அவர் மிகக் கண்ணியமானவர் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே டாக்டர் மணவாளனைப் பார்த்து, "இக்கனவானுக்கு நீ இவ்வீட்டில் இடம் தருவதாயின் எனக்கொன்றும் ஆட்சேபமில்லை. மேலும் அவரை இவ்வீட்டில் சேர்ப்பதால் எத்தகைய குறையும் ஏற்படாதென்பதையும் நான் நிச்சயமாகக் கூறுவேன்" என்றாள்.

தன்னைப்பற்றி இவ்வளவு நம்பிக்கையாகவும், பெருமையாகவும் பேசும் இவள் யாரென்று தெரிந்துகொள்ளும் பொருட்டு அவளை உற்று நோக்கினான். அவள் அதை உணர்ந்து அதற்குமேல் அப்போது பேச சமயமல்லவென்பதைக் குறிப்பினால் அறிவித்தாள். ஆகவே அவன் ஆர்வமுடன் அவளைப் பார்ப்பதை நிறுத்திக்கொண்டு மேலும் என்ன நடக்கிறதென்பதைக் கவனிக்கலானான். அப்போது மணவாளன், ஜகதீசனைப் பார்த்து, "நீ என்ன செய்தியைக்

கிராமவிடுதிக்காரனுக்குச் சொல்லி யனுப்பப்போகிறுய்'' என்று கேட்டான். அதற்கு ஜகதீசன், "நான் இவ்வீட்டில்தான் தங்கி யிருப்பதென்பது நிச்சயமாய்விட்டிருந்தால் என் சாமான்களை இங்கே கொண்டுவந்துவிடலாம். விடுதிக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தையும், நான் அக்கிராமத்துக்கு வந்த வண்டிக்காரனின் வாடகையையும் கொடுத்துவிடலாம்'' எனக் கூறிக்கொண்டே தன் பணப் பையினின்றும் பணத்தை எடுத்துக்கொடுத்தான். மணவாளனின் வேலைக்காரனும் உடனே அக்கிராமவிடுதிக்குப் புறப்பட்டான்.

பிறகு டாக்டர் மணவாளன், ரமாமணி அம்மாள், ஜகதீசன் ஆகிய மூவரும் இராச்சாப்பாட்டை அருந்த உட்கார்ந்துகொண்டார்கள். சாப்பிடும்போது அவர்கள் பற்பல விஷயங்களைப்பற்றி யெல்லாம் சம்பாஷித்தார்கள். எனினும் அப்போதெல்லாம் அம்மாது யார் என்பதிலேயே ஜகதீசனுடைய கவனமெல்லாம் சென்றிருந்தது. ரமாமணி என்னும் அம்மாது மாறுபெயருடன் பரிதிபுரத்தைச் சேர்ந்த டாக்டர் வீட்டில் வசிக்கவேண்டிய காரணமென்ன? அவள் அந்த டாக்டரின் மனைவியாகவோ அல்லது காதலியாகவோ காணப்படவில்லை. டாக்டர் அம்மாதை மரியாதையுடன் நடத்துகிறுர். அவள் விதவையோ அல்லது விவாகமானவளோ தெரியவில்லை. எப்படியிருப்பினும் டாக்டர் வீட்டில் அவள் தங்கியிருப்பதைக் கண்டால் அவள் விஷயத்தில் ஏதோ சந்தேகம் தோன்றுகிறது. ஆனல் அவள் உயர் குடும்பத்திலேயே பிறந்து வாழ்ந்தவளாகவும் தெரிகிறது. இப்படிப் பட்ட ஆச்சர்யமான சந்தர்ப்பத்தில் இருக்கும் அம்மாது யார்? என்பதிலேயே ஜகதீசன் கவனம் செலுத்தினுன். மேலும் அவள் மேற்பார்வைக்கு எவ்வளவுதான் சந்தோஷமுள்ளவ

ளைப்போல் காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் மிகவும் துக்கத்துடன் இருக்கிறுள் என்பதையும் அவள் ஏரியில் மூழ்கித் தற்கொலை செய்துகொள்ள முயன்றதால் அறிந்துகொண்டான். அன்றியும் மற்றெரு விசேஷத்தையும் அவன் அவளைப்பற்றி அறிந்தான். அதை அவன் அறிந்திருக்கிறுனென்பது அம்மாதுக்கும் தெரியாது. அதாவது அவளை ஏரியினின்றும் இழுத்துக் கரையில் போடும்போது அவளது உடை சற்று அப்புறப்பட்டதால் அவள் பூரண கர்ப்பவதியாய் இருக்கிறுள் என்பதையும் உணர்ந்தான். அவள் உடையினுல் அவள் விதவையாக இருக்கவேண்டுமென்று தோன்றுகிறபடியாலும் அந்த நிலைமையில் அவள் கர்ப்பவதியாக இருப்பதையும் காணும்போது அவனுடைய ஆச்சர்யம் அதிகரித்துவிட்டது.

இந்நிலைமையில் டாக்டர் மணவாளன், தான் சில நோயாளிகளைப் பார்க்கச் செல்லவேண்டுமென்றும், சிறிது நேரம் வெளியில் செல்வதற்காக மன்னிக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டதால் ஜகதீசனும் ரமாமணியும் தனியாக நின்ருர்கள். அப்போது ஜகதீசன் ரமாமணியைப் பார்த்து, "அம்மணி! இப்போது நான் சில விஷயங்களைப்பற்றிக் கேட்கத் துணிவதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்" என்ருன். அதற்கு அம்மாது, "இப்போது நாம் அதைப்பற்றிப் பேசக்கூடாது. டாக்டர் விரைவில் திரும்பிவந்துவிடுவார். அன்றியும் அவர் அக்கர்பக்கம் அறைகளில் மறைந்திருந்து நாம் என்னபேசுகிறேம் என்பதையும் கவனிக்கக்கூடும்" என்று கூறிஞள்.

அதற்கு அவன், "அப்படியானுல் விரைவில் எப்போது எங்கே இவ்விஷயமாகக் கலந்துபேசலாம் என்பதுபற்றிச்

சொல்லிவிடு. அப்போது பேசிக்கொள்ளலாம்'' என்று கேட்க அவள், "ஆம்; நானும் உன்னுடன் பல விஷயங் களைப் பேசவேண்டும். நீ என்ன காரியத்துக்காக வந்திருக் கிறாய் என்பதையும் நான் ஒருவாறு அறிந்திருக்கிறேன். இன்று இரவு வீட்டில் அனைவரும் படுத்துறங்கிய பின்னர் ஒரு அறையில் சந்திப்போம். உனக்காக டாக்டர் மண வாளன் ஒரு அறையைக் காலிசெய்து கொடுப்பார். இதோ இந்தத் தாழ்வாரத்தின் கோடியில் ஒரு காலி அறை இருக் கிறது. அங்கே யாரும் எப்போதும் வரமாட்டார்கள். அங்கு நான் காத்திருக்கிறேன்; நீயும் வரவும்'' என்று யோசனை கூறினாள். அதற்கு ஜகதீசனும் அவளுக்கு வந்தனம் செலுத்திவிட்டு அவ்வாறே செய்வதாக வாக்களித்தான். பிறகு அவர்களிருவரும் ஏதோ பொதுவான விஷயங்களைப் பகிரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தபோது டாக்டர் மண வாளனும் வந்துசேர்ந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் ரமாமணி எழுந்து தன் அறைக்குச் சென்றாள். அவள் சென்றபின்னர் டாக்டர் ஜகதீசனைப் பார்த்து, "ஐயா, நீ பரிதிபுரத்துக்கு என்னவேலையாக வந்தாய் என்பது எனக் குத் தெரியாது. எனினும் இப்போது அதைப்பற்றி நான் கேட்காமலே உனக்கு அவ்விஷயத்தில் என்னாலாகக்கூடிய உதவி ஏதேனுமிருந்தால் அதைச்செய்யத் தயாராயிருக் கிறேன் என்பதை மட்டும் அறிவிக்க விரும்புகிறேன்'' என்று கூறினான்.

அதற்கு நமது ஜகதீசன் டாக்டருக்கு வந்தனமளிப்ப தாகவும், டாக்டரின் உதவி தேவையாயின் கட்டாயம் பெறப்போவதாகவும் சொல்லிவிட்டுத் தன்னைப் படுக்க அனு மதி கொடுக்கும்படி கேட்டான். டாக்டரும் அவனுக்கு ஒரு தனியறையைக் காண்பித்து அதில் தங்கியிருக்கும்படி

கூறினன். பக்கத்துக்கு கிராமவிடுதியிலிருந்த அவனுடைய மூட்டையும் டாக்டருடைய சேவகனல் கொண்டுவரப்பட்டு அத்தனி யறையில் வைக்கப்பட்டிருந்தது. ஜகதீசன் தன் சாமான்களையெல்லாம் ஒழுங்கு படுத்திக்கொண்டே சிறிது நேரம் காலங்கழித்து ரமாமணி தெரிவித்தபடி அவ்வறைக்குச் செல்லக்கூடிய காலத்தை எதிர்பார்த்திருந்தான். அப்படியே வீட்டில் அனைவரும் தூங்கிவிட்டார்கள். வீடு நிசப்தமாய்விட்டது. நிசப்தமும் இருட்டும் ஒருங்கு சேர்ந்ததால் பயங்கரமாகவும் இருந்தது. நமது ஜகதீசன் நல்ல யௌவனம் வாய்ந்தவனுயும் தைரியசாலியாயு மிருந்தும் அந்த வீட்டில் அக்கால பயங்கரமான நிலைமையைக் கண்டு அஞ்சினன். எனினும் தைரியமாக அவன் தன் அறையைவிட்டுப் புறப்பட்டான். அக்கம் பக்கத்திலுள்ள அறைகளில் யாரும் மனிதர்கள் தங்கியிருக்கவில்லை என்பதை அவன் உணர்ந்தான். அவன் புறப்படும்போது மங்கலாக எரிந்துகொண்டிருந்த ஒரு மெழுகுவர்த்தி விளக்கைக் கையில் எடுத்துச் சென்றான்.

அந்த விளக்கின் ஒளியால் அவ்வீட்டுச் சுவர்களில் ஒருவகையான தோற்றங்கள் காணப்படலாயின. அவன் அடிமேல் அடிவைத்து நடக்கும்போது காலடிசத்தம் கேட்கலாயிற்று. இதனலெல்லாம் அவன் அச்சப்படவில்லையென்றாலும் அவனுடைய தேகம் முழுதும் நடுங்கலாயிற்று. ஏன்? தான் ஏதோ தவறு செய்வதாக உணர்ந்ததே அதன் காரணமாகும். நேயர்களே! உண்மையில் மனச்சாட்சியை மதித்து நடக்கும் உத்தமர்கள் தவருன காரியங்களில் தெரிந்தோ தெரியாமலோ ஈடுபடும்போது அவர்களுக்கும் தெரியாமலே அவர்கள் உள்ளத்தில் ஒருவகை அச்சம் தோன்றுகிறதல்

லவா? அதனால் அவர்கள் அத்தீய காரியத்தினின்றும் தடுக்கப்படுகிறார்கள்.

அத்தாழ்வாரத்தின் கோடியில் சென்றதும் அங்கு எதிர் எதிராக இரண்டு கதவுகள் இருப்பது கண்டு எந்தக்கதவைத் திறந்துகொண்டு செல்வதென்னும் சந்தேகத்தால் திணறினான். இரு கதவுகளின்மீதும் காதுவைத்து உற்றுக்கேட்டான். சாவியைப்போட்டுத் திறப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சந்தின்வழியாக ஏதேனும் வெளிச்சம் தெரிகிறதோ என்று பார்த்தான். சத்தமுமில்லை, வெளிச்சமுமில்லை. திரும்பித் தன் அறைக்குப் போய்விடலாமா என்று யோசித்தான்; ஒருகால் அம்மாது அவனை ஏமாற்றிவிட்டாளோ என்றும் கருதினான். ஆனால் அவள் அவனை ஏமாற்ற வேண்டிய அவசியமொன்றுமில்லையென்பதையும் உணர்ந்தான். எப்படியாவது இருக்கட்டுமென நினைத்துத் துணிவுடன் ஒருபக்கம் இருந்தகதவைப் பலமாகத் தள்ளி அவ்வறையில் பிரவேசித்தான். அது அம்மாது சொன்னதுபோல் அவ்வளவு பெரிதாகவும், பலரும் உட்காருவதற்குரிய ஆசனங்கள் ஒன்றுமில்லாததாகவும், இருட்டாகவும் இருந்தது. ஆகவே அதைவிட்டு வெளிவந்துவிடலாமா என முதலில் நினைத்தான். ஆனால் அங்கே ரசாயனசாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமான பல சாமான்களும், ஒருவகை துர்நாற்றமும் காணப்பட்டபடியால் தன் கையிலிருந்த விளக்கின் உதவியால் அந்த அறையை நன்றாக ஆராய்ச்சி செய்யவேண்டுமென்னும் ஆவல் அவனுக்கு அதிகரித்தது. இந்த ஆவலினால் அவன், தன் அறையைவிட்டு எதற்காக வந்தானென்பதையும் மறந்து அவ்வறையிலுள்ள சாமான்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்க்க விரும்பினான். ஆனால் தன்னை விருந்தினனாக ஏற்றுக்கொண்ட ஒருவர் வீட்டில், அவருக்கும்

தெரியாமல் அவருடைய இரகசியங்களையெல்லாம் கண்டறி வது நீதியல்லவென்னும் எண்ணமும் அவன் மனதில் தோன்றிற்று. எனினும் பிணங்களை எரிக்கும் சுடுகாட்டில் எவ்வித துர்நாற்றம் வீசுமோ அத்தகைய நாற்றம் அங்கு அதிகமாக வீசியதால் அங்கே என்ன இருக்கிறதென் பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆர்வம் அதிக மாயிற்று.

இவ்வாறாக அவன் அங்கிருந்த ஒரு பெரிய மரப்பெட்டி யைத் திறந்துபார்த்ததில் அதில் மனிதர்களுடைய தலைகள் இருக்கக்கண்டு திடுக்கிட்டான். எனினும் அச்சத்தால் கூச்ச லிட்டுவிடாமல் ஒருவாறு சமாளித்துக்கொண்டு அவற்றை யும், மற்றும் அங்கிருந்த சாமான்களையும் நன்றாகச் சோதனை செய்து பார்த்தான். அதனால் அது ஏதோ ஒருவகை சரித்திர ஆராய்ச்சிக்காக இவ்வாறு டாக்டரால் செய்யப்படுகிறதென் பதை உணர்ந்தான். அக்காலத்தில் பற்பல அறிஞர்களும் இவ்வாறு சோதனைசெய்து அவ்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருவதில் அதிக கவனம் செலுத்திவந்தார்கள். ஜகதீசன் எப்போதுமே நல்லெண்ண முடையவனாதலால், டாக்டர் மணவாளனுடைய அறையில் இவ்வாறு பிரேதங்கள் இருப் பதைக்கண்டு அவன் டாக்டரைப்பற்றி எவ்விதமாகவும் கேவல மாய் நினைக்கவில்லை. மேலும் டாக்டர் அவ்வறையைப் பூட் டாமல் வைத்திருந்ததால் அதில் ரகசியமொன்றுமில்லை யென் பதையும் அறிந்துகொண்டான்.

எனவே ஜகதீசன் அவ்வறையிலிருந்து வெளியில் வந்து அதன்கதவைப் பழையபடி மூடிவிட்டு அதற்கு எதிரிலும், தாழ்வாரத்தின் கோடியிலும் இருந்த மற்றொரு அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளேசென்றான். அங்கு சிவப்

புத் துணியாலாகிய திரை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதையும் அப்புறப்படுத்திக்கொண்டு உள்ளே சென்றதில் ரமாமணி அம்மாள் கீழும் மேலுமாக உலாவிக்கொண்டே இருப்பதைக் கண்டான். உடனே, "அம்மையே! என்னை மன்னிக்கவேண்டும். நான் உன்னை நீண்டநேரமாகக் காத்திருக்கும்படி செய்துவிட்டேனே என்னமோ தெரியவில்லை. உண்மை என்னவென்றால் அறைகளில் விளக்கு இல்லாததால் நான் தெரியாமல் அடுத்த அறையில் புகுந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே அவ்வறையின் கதவைச் சாத்தி உட்புறம் தாளிட்டுக்கொண்டு அம்மாதினருகில் சென்றான். அதற்கு அவள், "இந்த அறைக்குக் கதவின்பின்னால் திரையுமொன்று இருப்பதால் வெளிச்சம் வெளியில் தெரியவில்லை. இதற்கு எதிரிலுள்ள மற்றொரு அறை டாக்டர் ரசாயன சாஸ்திர ஆராய்ச்சிசெய்யும் அறையாயிற்றே. நானும் ஒருமுறை அதில் எட்டிப்பார்த்தேன். ஆனால் அதன் தோற்றமும் துர்நாற்றமும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆதலின் நான் அதில் நுழையவேயில்லை" என்றாள்.

அதைக்கேட்ட ஜகதீசன், "என் சம்பந்தப்பட்டவரை அவ்வாறு வந்துவிட என்னால் முடியவில்லை. நான் அங்குள்ள எல்லாவற்றையுமே பார்த்துவிட்டு வந்ததால் சாவகாசமாய்விட்டது. இப்படிப்பட்ட பயங்கரமான இடத்தில் நீ எப்படி வசித்துவருகிறாய் என்பதுதான் எனக்கு ஆச்சர்யமாய் இருக்கிறது" என்றான். அப்போது அம்மாது அவனை அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டுத் தானும் அருகிலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "கனவானே! இன்று மாலை நேர்ந்த சம்பவத்தால் நீ என் விஷயங்களைப்பற்றி அறிய உரிமையுடையவனாயிருப்பதால் என்னைப்பற்றிச் சில விஷயங்களைக்கூற விரும்புகின்

றேன். கடவுள்தான் எங்களிருவரையும் இவ்வாறு சேர்த்து வைத்தாரென்றே நான் நினைக்கிறேனே யன்றி தற்செயலாக நீ வந்து என்னை ஏரியில் மூழ்குவதினின்றும் தப்புவித்த தாகக் கூற என்னால் முடியவில்லை. ஆகவே என் சரித்திரத்தைப்பற்றி உன்னிடம் சொல்லிக்கொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகமாயிருக்கிறது. இவ்வாறு கூறிக்கொள்வதனால், "சுவரோடாயினும் சொல்லியழு" என்பதுபோல் எனது கவலை சிறிது குறைந்து ஆறுதல் ஏற்படும். நம் இருவருடைய வயதும் யௌவனமாகவே இருந்தபோதிலும் இந்நிலையில் நான் உன்னை ஒரு சகோதரனாகவே ஏற்றுக் கொண்டு இதை உன்னிடம் கூறுகின்றேன். ஆகவே என் துக்கங்களையும், குற்றங் குறைகளையும்பற்றி உன்னிடம்கூற நீ அனுமதி யளிக்கின்றாயா?" என்று கெஞ்சிக்கேட்டாள். அதற்கு ஜகதீசன், "அம்மணி! நிச்சயமாகச்சொல். அதனால் நான் உன்னைக் கேவலமாகக்கருதவோ, துரோகம் செய்யவோ மாட்டேன். என்னாலான உதவிசெய்யவும், ஆறுதல் கூறவும் சிறிதும் பின்வாங்கமாட்டேன்," என்று பச்சாதாபத்துடன் பதில் கூறினான்.

ஜகதீசன் அன்புடனும் அனுதாபத்துடனும் கூறிய மொழிகளைக்கேட்ட ரமாமணி ஒருவாறு தைரியமடைந்து, "நண்பா! மாதர்கள் சகஜமாகவே மனோ உறுதியிலும், தேக திடத்திலும் பலஹீனமானவர்கள் என்பது பொதுவான அபிப்பிராயமல்லவா? அதுபோலவே நான் என் பலஹீனத்தின் காரணமாக என் கடமையை மறந்து சூழ்ச்சியிலும் தந்திரத்திலும் சிறந்தவனான ஒரு ஆடவனிடம் ஏமாந்துவிட்டேன். இவ்வாறு ஆடவர்களிடம் பெண்கள் ஏமாறுவது சகஜமாகவே காணப்படுகின்றதல்லவா? நான் மாறுபெயருடன் இங்கு தங்கியிருக்கிறேனென்பதை முன்னமே உன்னிடம்

தெரிவித்தேனன்றே? நான் என் உண்மைப்பெயரை இப்போது உனக்குச் சொல்லாவிட்டாலும் நான் தக்க கல்வியும் அந்தஸ்தும் உடையவளென்பதை மட்டும் அறிவிக்க விரும்புகின்றேன். எனக்கு ஒருமுறை கலியாணமாயிற்று; ஆனல் நான் ஒருவிதவை. நான் தெரியாத்தனமாகவும், என் கெட்டகால பலனுகவும், மிக்க அழகும் யௌவனமும் வசீகரத்தன்மையுமுள்ள ஒரு ஆடவன்காட்டிய காதலுக்கு இரையானேன். அவனுக்குக் கலியாண மாயிருக்கிறதென்பதையும், ஆதலின் அவன் என்னை நிரந்தரமாகவேநேசிக்க முடியாதென்பதையும் நான் அறிந்திருந்தும் காலபலனுக்குட்பட்டு அறிவையும் யோசனையையும் இழந்து அவனுடைய வலையில் சிக்கிக்கொண்டேன். நான் அவனது விருப்பத்துக்கிணங்கிய சொற்பகாலத்துக்குள், என்னை நிரந்தரமாக நேசிப்பதாக உறுதி கூறிய அவன் இரத்தினபுரியை விட்டுவெளியேறிவிட்டான். அவன் அவ்வாறு சென்றுவிட்டபோது அவன் சில அவசியத்தை யொட்டி அவ்வாறு போவப்போவதாகவும், அதற்காக அவன் வருந்துவதாகவும் எனக்கொரு கடிதம் அனுப்பி யிருந்தானென்றாலும் அக்கடிதம் எனக்குத் திருப்தியைத்தரவில்லை. நான் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தேன். ஆஹா! நானும் சாதாரண விலைமாதரைப்போல் கருதப்பட்டேனே என்று நினைந்து நினைந்து அழுகிறேன்'' என்று விவரமாகக் கேட்போர் பரிதாபப்படும்படி கூறினாள். அப்போது அவள் தன் முகத்தைக் கைக்குட்டையால் மூடிக்கொண்டு பெருமூச்செறிந்தாள். அவள் கண்களினின்றும் நீர்த்துளிகள் கீழேவிழுவதை ஜகதீசன் பார்த்தான். ஆயினும் அவன் என்னசெய்யக்கூடும்? எவ்விதமாக அவளைத் தேற்றுவதென்றும் அவனுக்குத் தெரியவில்லை. மேலும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பெண்களுக்குப் பெண்களே ஆறுதல் சொல்வதுதான் பொருத்தமாகும்.

மீண்டும் ரமாமணி அம்மாள் தன் கண்ணீரைத்துடைத்துப் போட்டுவிட்டு, "அக்கடிதம் கிடைத்தபின்னர் நான் ஏமாற்ற மடைந்தேனென்றாலும் இனி எப்படியாவது இந்த இரகசியத்தை மூடியாவது வைக்கவேண்டுமென்று பிரயத்தனப்பட்டு என் வாழ்க்கையை ஜாக்கிரதையாக நடத்திவந்தேன். அன்பனே! அப்போதுதான் நான் உன்னைப்பற்றிக் கேள்விப்பட நேர்ந்தது. நமது இளவரசரின் குமாரியான சண்பகவல்லி தன் அத்தை சுந்தராங்கியிடம் உன்னைப்பற்றிப் பெருமையாகவும் கண்ணியமாகவும் பேசிக்கொண்டிருந்ததை நான் கேள்விப்பட்டேன். அவர்கள் எனக்குத் தெரியலாகாதெனப் பல விஷயங்களை மறைவாகப் பேசிக்கொண்டார்கள். எனினும் அவர்கள் உன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசினார்களென்பது நிச்சயம். அவர்கள் உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டதிலிருந்தே நானும் உன்பால் அவ்வளவு நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கொண்டேன்'' என்று கூறினாள்.

அதற்கு ஜகதீசன், "அம்மணி! நீயும் என்னைப்பற்றி இவ்வளவு பெருமையாகப் பேசுவதற்காக நான் உனக்கு மிக்க வந்தனம் செலுத்துகின்றேன். மிக்க துயரத்திலும் துன்பத்திலும் சிக்கிக்கொண்டிருக்கும் நமது இளவரசியைப் பாதுகாக்க வேண்டுமென்னும் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டுவிட்டதாலேயே இப்போதும் இந்தப் பரிதிபுரத்துக்கு வந்திருக்கிறேன். இதற்கு முன்னும் வந்து வழியில் பல கஷ்டங்களை அனுபவித்தேன்; அது பெரிய விஷயம். அதை நான் பிறகு சொல்கிறேன். இப்போது நீ உன் சரித்திரத்தைப் பூராவாகச்சொல்லி முடித்துவிடு'' என்றான்.

அதற்கு அவள் மீண்டும் பின்வருமாறு கூறலானாள்:—
"என் காதலன் இவ்வாறு மறைந்துவிட்ட பின்னர் நான்

என் இரகசியத்தை எவ்வளவுதான் மூடிவைத்துக்கொள்ள விரும்பினாலும், உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூட முடியுமா என்பதுபோல் இரத்தினபுரி வாசிகள் எப்படியோ அதை என் காதலனின் உற்றார் உறவினர் மூலமாக அறிந்து கொண்டு என்னைப்பற்றி இழிவாகவும் பரிகாசமாகவும் பேச ஆரம்பித்தார்கள். ஆகவே நான் அந்நகரைவிட்டு எங்கேனும் சென்று மறையவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நான் முறைதவறி நடந்துகொண்டதற்காகத் தக்கபடி தண்டிக்கப் பட்டேன். பிறகு நான் வேறு ஒரு நகரில் சென்று தங்கி யிருந்தபோது எனக்கு ஒரு எண்ணம் உதித்தது. அதாவது நான் எப்படியாவது எனது காதலனைத்தேடி அவனை மீண் டும் அடைந்து அவன் எனக்கிழைத்த துரோகத்துக்காக வருந்தும்படி செய்து மறுபடியும் அவனுடன் உல்லாசமாகக் காலங்கழிக்க வேண்டுமென்பதே. எனினும் அவன் என் னைத் துரோகம் செய்துவிட்டுப்போனதால் எப்படியாவது அவனைப் பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணம்தான் எனக்கு அதிகமாயிற்று. இதற்கிடையில் ஒரு அசந்தர்ப்பம் நேர்ந்ததை அறிந்தேன். அதாவது என் கற்புநிலையினின் றும் தவறி அக்காதலனுடன் கூடிய பயனை அனுபவித்து விட்டதை யறிந்தேன். அதாவது நான் கர்ப்பவதியாக இருப் பதை உணர்ந்தேன்'' என்றாள்.

இக்கடைசி வார்த்தைகளைக் கூறும்போது அவளுடைய தலை வெட்கத்தால் தானாகக் குனிந்துவிட்டது. சிறிதுநேரம் அவள் ஒன்றும் பேசாமல் மௌனமாய் உட்கார்ந்திருந்தாள். ஜகதீசன் மிக்க ஆயாசமான நிலைமையில்தான் இருப்பதை யறிந்தான். அவனும் இளைஞன்; அவளும் யௌவனமாது. இருவரும் தனியே நடுநிசியில் ஒரு பிரத்யேக அறையில் இருக்கிறார்கள். அவளும் மிக்க அற்புதமானதும் தூக்க

மயமானதுமான சங்கதிகளை அவனிடம் சொல்லிக்கொண்டிருக்கிறாள். அவனும் அவளிடம் அனுதாபமடைந்து கருணை காட்டுகிறானென்றாலும் அது விஷயமாய் என்ன பேசுவதென்று தெரியாமல் திகைக்கிறான். உண்மையிலேயே அந்த நிலைமையில் ஜகதீசனைப்போன்ற மனச்சாட்சிக்குப் பயந்தவனும் யோக்கியமானவனுமான இளைஞன் அங்கு இல்லாமல் சற்று ஏறுமாறான குணமுடையவன் இருந்திருந்தால் அவர்களுடைய அனுபவம் வேறுவிதமாய் முடிந்துவிட்டிருக்கும் என்பதுபற்றி நாம் கூறவேண்டுவதில்லை. அம்மாதின் குற்றங் குறைகளையும் பலஹீனத்தையும் பரிதாப நிலைமையையும் அறிய அறிய அவன் தன் தீய சுயகாரியத்தை முடித்துக் கொள்ளவே நல்லசமயம் வாய்த்ததெனக் கருதியிருப்பான். ஆனால் நமது ஜகதீசனோ உயரிய குணாதிசயங்களையும், நற்குண நல்லொழுக்கத்தையும் ஆபரணமாகப் பூண்டவன். ஆகவே அவன் ஒன்றும் பேசாமல் உருகிய மனத்துடன் அவள் கூறிவந்ததையெல்லாம் கேட்டுக்கொண்டே இருந்தான்.

அப்போது அவள் மீண்டும் தன் சரித்திரத்தைக்கூற ஆரம்பித்து, "ஆகவே எனக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் தந்தையாகிய அக்காதலனைத் தேடிப் பிடிக்கவேண்டுமென்னும் ஆவல் அதிகரித்துவிட்டதேயொழிய பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணம் மறைந்துவிட்டது. எனவே நான் அக்காதலனைத் தேடிக்கொண்டு ஊர் ஊராக அலைந்து கொண்டிருக்கிறேன். நான் என் காதலனைக்கண்டு பிடித்துவிடுவேனாயின் அவனிடம் "ஐயா, இனி இரத்தினபுரிக்குத் திரும்பவேண்டாம்; எனக்காக அந்த நகரத்தைத் துறந்துவிடு. நீ அக்காலத்தில் எனக்குத் தைரியத்தையும் உற்சாகத்தையும் ஊட்டியதனாலல்லவா நான் பொதுஜன அபிப்

பிராயத்தையும் மதியாமல் உன் காதலில் மயங்கிவிழுந்தேன். ஆதலின் இப்போது நீ என் வார்த்தையைக்கேட்டு நடப்பதே சரியானதாகும். நீ உண்மையில் விரும்பாத உன் மனைவியையும் எனக்காகத் துறந்துவிடுவது உனக்குப் பெரிய காரியமல்ல. நான் என் சொத்துகளையும், என்னையும் உன்னிடம் சமர்ப்பித்துவிடுவேன். உனக்காக எப்படிப்பட்ட தியாகத்தையும் செய்யத் தயாராயிருப்பேன். ஆதலின் எனக்குப் பிறக்கப்போகும் குழந்தை பிறக்கும் சமயத்தில் அது தன் தந்தையின் காத்தில் இருக்கக்கூடிய பாக்கியம் பெறட்டும்'' என்று கூறுவதாக நிச்சயித்திருக்கிறேன். நான் செல்லுமிடங்களிலெல்லாம் விசாரித்ததில் என் காதலனைப்போன்ற ஒரு மனிதன் அவ்வூருக்கு வந்திருந்ததாகவும், அப்போதுதான் வெளியூருக்குச் சென்றுவிட்டதாகவும் கூறுகின்றனர். இவ்வாறாக நான் இங்குவந்து சேர்ந்தேன். நான் இங்குவந்து பதினைந்து தினங்கள் தானாகின்றன. இங்கு வந்ததிலும் அவனைப்போன்ற ஒரு மனிதனும் அவனுடன் மற்றொருவனும் வந்திருந்ததாகவும், அவர்கள் எங்கே போனார்களென்று தெரியவில்லையென்றும் பேசிக்கொள்கின்றனர். நான் ஒரு விடுதியில் தங்கியிருந்தபோது எனக்கு மனோவிசாரத்தால் நோய் கண்டபடியால் இந்த டாக்டர் மணவாளனைச் சந்திக்க வேண்டியதாயிற்று. அவரிடமும் என் சரித்திரத்தையெல்லாம் கூறிவிட்டேன். நான் இரகசியமாகப் பிரசவித்து முடிகிறவரையிலேனும் அந்தரங்கமாக டாக்டர் விடுதிலேயே தங்குவதென அவர் யோசனையின் படியே சம்மதித்தேன். இங்குவந்த பிறகு என்போன்ற நிலைமையில் இருந்த பல மாதர்கள் இதற்குமுன் இங்குக் காலங் கழித்திருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். வெளியூர் வாசிகளான இத்தகைய மாதர்களே இந்த டாக்டரின் போஷகர்களாக இருந்திருக்கிறார்கள். இப்போது நான்

ஒருத்திதான் இம்மாளிகையில் இருக்கின்றேன். ஆதலின் உன்னை நிறுத்திக்கொள்வதற்குமுன் டாக்டர் என் அனுமதியைக் கோரினர்.

மறுபடியும் ரமாமணி அம்மாள் சிறிதுநேரம் மௌனமாயிருந்து துக்கத்தால் பெருமூச்செறிந்தாள். சிறிது நேரத்துக்குப்பின் அவள் மேலும் கூறியதாவது:—"இப்போது நாம் இருவரும் சந்திக்கும்படியான சந்தர்ப்பத்தைப்பற்றிச் சொல்கிறேன். நான் அவமானத்துடனும் துயரத்துடனும் கஷ்டப்பட்டதால் அக்கஷ்டம் தாங்காமல் அந்த ஏரியில் விழுந்து மூழ்கியாவது இறந்துவிடலாமென நிச்சயித்தேன். ஆகவே நான் அந்த ஏரிக்கரைக்குச் சென்று அங்கு நின்றுகொண்டு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி இந்த ஏழை நெஞ்சம் புண்ணானேன். ஆ; நான் சிறிது காலத்துக்குமுன் வரையில் எத்தகைய அந்தஸ்தில் இருந்தேன்; இப்போது இருக்கும் என் நிலைமை என்ன? உற்றார் உறவினர், பந்துமித்திரர்களையெல்லாம் விட்டுத் தொலைவிலுள்ள ஒரு நகரில் திக்கற்ற நிலைமையில், இரகசியமாக ஒரு டாக்டரின் துணையைக்கொண்டு அந்தரங்கமாகப் பிரசவிக்க வேண்டிய நிலைமைகளை ஒவ்வொன்றாகச் சிந்தித்தபோது நான் பகிஷ்கரிக்கப்பட்டவளாகவும், எனக்குப் பிறக்கும் குழந்தைக்கும் பழிபாவம் சூழ்ந்துகொள்ளுமென்றும் கருதினேன். இவ்வாறு துயரக்கடலில் மூழ்கியிருந்த நான் உண்மையிலேயே பரிதிபுரக்கடலில் விழுந்து இறந்துவிடுவதே நலமெனக்கருதி என் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றேன். ஆனால் நான் இறக்குங்காலம் இன்னும் வரவில்லைபோலும்! இறைவன் என் மரணத்தைத் தடுக்கும்பொருட்டு உன்னை அனுப்பினர்போலும்! ஆ! என் உயிரையே காப்பாற்றிய உனக்கு நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன்."

இவ்வாறு கூறியதும் அவள் அவமானத்தாலும் துக்கத்தாலும் தன் இருகரங்களாலும் தன் முகத்தை மூடிக்கொண்டு அழுதபடியால் சொற்பநேரம் பேசாமல் மௌனமாக இருந்தாள். சற்று நேரத்துக்குப் பின்னர் மீண்டும் பேச ஆரம்பித்து, "இப்போது நீ என்னுடைய துக்க மயமான சரித்திரத்தில் எவ்வளவு தூரம் அவசியமாக அறிந்துகொள்ளவேண்டுமோ அவ்வளவும் அறிந்துகொண்டுவிட்டாய். இனி நீ எந்த ஒரு நல்ல காரியத்தைச் சாதிப்பதற்காக இங்கு வந்திருக்கிறாயோ அதில் என்னாலியன்றவரை உனக்குத் துணைபுரியக் காத்திருக்கிறேன். ஆனால் நான் எவ்வழியில் உனக்கு உதவிசெய்யக் கூடுமென்பது எனக்குத் தெரியவில்லை" என்றாள். அதற்கு அவன் அம்மாதுக்கு வந்தனம் செலுத்திவிட்டுத் தன் சரித்திரத்தைச் சிறிது சுருக்கமாகக் கூறிவிட்டு இரத்தினபுரி இளவரசியின் மாளிகையில் பல விரோதிகளும் வேவுகாரர்களும் சூழ்ந்திருக்கிறார்களென்றும், அவர்களுக்கெல்லாம் தெரியாமல் எப்படித்தான் இளவரசியை நேரில் காணமுடியுமென்பதுபற்றித் தனக்கு ஒன்றும் தெரியவில்லையென்றும் கூறினான்.

ரமாமணி:—ஏன்? நாளை காலை நீ தைரியமாக இளவரசியின் மாளிகைக்குச் சென்று அவளுடைய பேட்டி காண விரும்புவதாக அறிவிக்கக் கூடாதா?

ஜகதீசன்:—இளவரசியின் மாளிகையில் சிலமாதர்கள் இருக்கிறார்கள். நான் இளவரசியைக் காணமுயன்றால் அவர்கள் சிறிதும் அதற்கு இடந்தரமாட்டார்கள். அவர்கள் என்னைத் தடுப்பதற்கு எத்தகைய இழிவான காரியத்தையும் செய்யத் துணிவார்கள்.

ரமா:—அப்படிப்பட்ட அந்த மாதர்கள் யார்?

ஜக:—அவர்கள் மூன்று சகோதரிகள். மரகதம்மாளின் புதல்விகள்.

ரமா:—அப்பெண்களா? அவர்களைப்பற்றியும் நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களில் ஒருத்தியைப்பற்றி இரத்தினபுரியிலேயே எதை எதையோ பேசிக்கொள்கின்றனர். பொதுவாகவே அவர்கள் நற்குண நல்லொழுக்க முடையவர்களல்லவென்று தெரிகிறது.

ஜக:—இன்று பகல் நான் டாக்டர் மணவாளனுடன் பக்கத்துக் கிராமவிடுதியில் சாப்பிட்டபோது இவ்விஷயமாகப் பேசிய சமயத்தில் அவன் நடந்துகொண்டவிதத்தால் அவனுக்கு இளவரசியின் மாளிகை சம்பந்தமாகப் பல விஷயங்கள் தெரிந்திருக்கவேண்டுமென நினைத்தேன்.

ரமா:—ஆம்; வாஸ்தவமே. டாக்டர் மணவாளன் இளவரசியின் மாளிகை சம்பந்தமாக ஏதோ அற்புத இரகசியத்தை அறிந்திருக்கிறனென்றே எனக்கும் தோன்றுகிறது. அவன் மிக எச்சரிக்கையுடையவனா யிருந்தாலும் இரண்டொரு சமயங்களில் என்னிடம் பேசும் போது, அவனுக்கு அம்மாளிகையின் இரகசியம் தெரியுமென்று நான் தெரிந்துகொள்ளும் வண்ணம் பேசி யிருக்கிறன்.

ஜக:—அந்த இரகசியம் யாரைப்பற்றி? யாதாயிருக்கும் என்பது தெரியவில்லையே.

ரமா:—அது எனக்குத் தெரியாது. டாக்டர் எப்போதுமே என்னிடம் அதைப்பற்றியெல்லாம் விவரமாகப் பேசியதில்லை. ஆனால் அவன் விரும்பினால் அதைப்பற்றிய இரகசியங்களைக் கூறமுடியும் என்பதை மட்டுமே நான் அறிந்திருக்கிறேன்.

ஜக:—ஆனல் அவன் இளவரசியைப்பற்றி யல்லவா பேசுகிறான். அவளைப்பற்றி அவன் கூறும் விவரம்தானென்ன?

ரமா:—ஆம்; அவளைப்பற்றித்தான் எல்லாரும் கேவலமாகப் பேசிக்கொள்கிறார்கள். சுருங்கச் சொல்லவேண்டுமாயின் இளவரசி தன் காரியஸ்தனை பலராமனையே காதலனாக வைத்துக்கொண்டிருப்பதுடன் மற்றும் பல ஆடவர்களையும் அப்போதைக்கப்போது மாளிகையில் சேர்த்துக்கொள்வதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். அதுமட்டுமா? அவள் ஒரு குழந்தையைப் பெற்றதாகவும் சொல்கிறார்கள்.

ஜக:—ஆ, கடவுளே! இவைகளெல்லாம் உண்மையாக இருக்குமா? வேண்டுமென்றே கெட்டுப்போன ஒருத்திக்காக நான் இவ்வளவு பாடுபடுகிறேனென்றால் உலகம் என்னைக்கண்டு சிரிக்காதோ? அல்லது அவள்மீது வீண் பழிதான் சுமத்தப்படுகின்றதோ?

ரமா:—நானும் வெறும் பழியாகத்தான் இருக்குமென உறுதியாக நம்புகிறேன். எப்படியிருந்தாலும் எல்லாம் மர்மமாகவே இருக்கின்றது. மாகதம்மாளின் குமாரத்திகளில் ஒருத்தியான ஜானகி என்பவள் ஒரு காதலனை அம்மாளிகையில் அழைத்துக்கொள்கிறாள் என்பது உண்மை. அதை இளவரசியின்மீது பழி சுமத்திவிட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனல் அப்பெண்கள்தான் குற்றவாளிகளாக இருக்கவேண்டும்.

ஜகதீசன்:—சரிதான். இப்போது நான் எல்லாவற்றையும் உணர்ந்துகொண்டேன். இதில் ஏதோ சூழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழ்ச்சி எப்படி யாரால்

நடத்தப்படுகிறதென்பதும் என் மனக்கண்ணுக்கு நன்ருகப் புலனுகின்றது. நீ கூறிய குறிப்புகளாலும் நான் பல விஷயங்களை உணர்ந்துகொண்டேன். உண்மையில் இளவரசி குற்றமற்றவள் என்பதே என் கருத்து.

குற்றமற்ற பரிசுத்த மனத்தினளான இளவரசியைப் பழியினின்றும் பாதுகாக்க ஒரு வீரன் தோன்றியதைக் கண்டு ரமாமணி அடைந்த சந்தோஷத்தில் தன் குற்றங்களையும் துயரங்களையும் ஒருவாறு மறந்துவிட்டாள். அந்த ஆனந்தத்தில் அவள் ஜகதீசனைக் கூர்ந்துநோக்கினுள். அப்போது அவள் சம்பந்தப்பட்ட இரகசியங்களைத் தான் அறிந்தவரையில் எல்லாவற்றையும் விவரமாக அவளிடம் கூறினன். அப்போது அவளும் இளவரசி குற்றமற்றவளென்றும், அவள் சூழ்ச்சிக்கு ஆளாகி வருந்துகிருளென்றும் உணர்ந்தாள். இவ்வாறு அவர்கள் பேசி முடித்தபோது ஒன்றரைமணியாய்விட்டதால் இருவரும் அந்தப் பிரத்யேக அறையை விட்டுத் தங்கள் அறைக்குச் சென்ருர்கள்.

126 - வது அத்தியாயம்

மறுநாட்காலை ரமாமணியம்மாள் மிக்க ஆயாசத்துடன் இருந்ததால் தன் அறையிலேயே தனியாகக் காலை ஆகாரத்தை அருந்தினுள். ஆகவே டாக்டர் மணவாளனும் ஜகதீசனும் தனியாக ஒரு அறையில் காலை ஆகாரத்தை அருந்தினர். ஆகாரம் முடிந்ததும் ஜகதீசன் டாக்டரைப் பார்த்து, "ஐயா, மிகவும் முக்கியமானதும், சிக்கலானதுமான ஒரு விஷயத்தைப்பற்றி நான் சில விஷயங்களை உன்

னுடன் பேசவேண்டும்" என்றான். அதற்கு டாக்டர், "ஆம்; அவ்வாறு பேசுவதில் எனக்கும் சந்தோஷமே. என்னுடைய அந்தரங்க அறைக்குப்போவோம்" என்று கூறிக் கொண்டே ஜகதீசனை, முன்னாள் இரவு ஜகதீசன் தற்செயலாய் நுழைந்து பிரேதங்களைக் கண்ட அதே அறைக்கு அழைத்துச் சென்றான்.

அப்போது ஜகதீசன், சிநேககனே! நீ உலக விஷயங்களை அறிந்தவனென்றே கருதுவதால் வீண்காலப் போக்குச் செய்யாமல் நேராக விஷயத்தையே பேச ஆரம்பித்துவிடுகிறேன். நான் எந்த உத்தேசத்துடன் இங்கு வந்திருக்கிறேனே அவ்விஷயத்தில் எனக்குதவிபுரிய உன்னால் முடியுமென நினைக்கிறேன். ஆதலின் அவ்வாறு செய்வாயானால் உனக்குத் தக்க பொருள் சன்மானம் செய்வேன். நான் எதுவோ வழிப்போக்கனென்றும், எனக்குத் திக்கில்லையென்றும் நினைக்கவேண்டாம். என் காரியத்துக்கவசியமான பெருந்தொகையைச் சென்றவிடங்களிலெல்லாம் பெறுவதற்குரிய வசதியைப்பெற்றே நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று கூறினான்.

அதற்கு டாக்டர், "சரிதான்; நான் எத்தகைய உதவி உனக்குச் செய்யமுடியுமென நீ கருதுகிறாய்," என்று கேட்டுக்கொண்டே உள்ளத்தில் அளவிலா உவப்படைந்தான். எப்படியாவது பொருள் சேகரிப்பதையே கருத்தாகக் கொண்ட அந்த வைத்தியனுக்கு ஜகதீசன் பொருள் தருவதாகச் சொன்னதில் அதிக சந்தோஷம் ஏற்பட்டு எந்த வேலையையும் செய்வதெனத் துணிந்திருந்தான். அதைக் கேட்ட நமது ஜகதீசன், "இந்தப் பரிதிபுரத்திலுள்ள டாக்டர்களைவிட நீயே அதிக வருவாயுள்ளவன் என நான் நினைக்கிறேன். எந்த டாக்டரிடமும் செல்லாத பலர், அவர்க

ளுடைய இரகசியநிலைமையை யொட்டி உன்னிடமே வரு கிறார்கள். ஆதலின் பலருடைய இரகசியங்களை நீ அறிந்து கொண்டிருக்கிறாய் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேக மில்லை. நீ இப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறாய் என் பதை உன்னைச் சுற்றிலுமுள்ள சந்தர்ப்பங்களைக்கொண்டே அறிந்துகொள்ளலாம்'' என்று கூறினான்.

மண:—அப்படியானால் என்னுடைய சந்தர்ப்பமெல்லாம் உனக்குத் தெரியும்போலும்! நீ எதையோ எனக் குக் கேட்பதற்காக இப்படியெல்லாம் முகவுரை பேசிக்கொண்டிருக்கிறாய். அதெல்லாம் வேண்டாம்; நேராகக் காரியத்தில் இறங்கு. விரைவில் இரு வரும் ஒருவரை யொருவர் பரஸ்பரம் அறிந்துகொள் வோம்.

ஜக:—சரி; சமீபத்தில் உனக்குப் பொருள் கொடுத்து ஒரு இரகசிய காரியத்தைச் சிலர் முடித்துக்கொண்டார் களே அதைப்பற்றிச் சொன்னால் அவர்கள் கொடுத் ததைவிட இரண்டு அல்லது மூன்றுமடங்கு அதிக மாகத் தருவேன்.

மண:—மீண்டும் இவ்வாறு குறிப்பாகப் பேசவேண்டாம். என்னிடம் எவ்வளவோ இரகசியமிருக்கிறது. அதில் நான் எதையென்று உன்னிடம் கூறுவது? பல ஊர் களிலிருந்தும் உயரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் என் ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள். ஆகை யால் எது முக்கியமென்று நான் கருதுகிறேனோ அது உனக்கு வேண்டாமலிருக்கலாம். ஆதலின் உனக்கு யாரைப்பற்றிய இரகசியம் வேண்டும் என்று குறிப் பிட்டுக்கேள். விவரமாகக் கூறுகிறேன்.

ஜக:—நேற்று நீ என்னுடன் பேசியதிலிருந்தும் நான் எந்த வேலையாக இங்கு வந்திருக்கிறேன் என்பது தெரியவில்லையா? இங்கு தங்கியிருக்கும் இரத்தினபுரி இளவரசியைப்பற்றியும், அங்குள்ளவர்களைப்பற்றியும் உனக்கு ஏதோ இரகசியம்தெரியும் என்பதை நீ அப்போதே காண்பித்துக்கொண்டாய் அல்லவா? இளவரசி இரகசியமாய்ப் பல காதலர்களைச் சேர்த்துக்கொள்வதாகவும், சமீபத்தில் ஒரு குழந்தையைப் பிரசவித்ததாகவும் கேள்விப்பட்டேன். ஆகவே இதைப்பற்றியெல்லாம் விவரமாக உண்மையை விளக்குபவர் உன்னைவிட இவ்வூரில் வேறு யார் இருக்கிறார்?

இவ்வாறு கேட்டுக்கொண்டே ஜகதீசன் டாக்டர் மணவாளனுடைய முகத்தைப் பார்த்ததில் அவன் பணத்துக் காசைப்பட்டு எதுவும் பேசாமலிருக்கிறானென்று உணர்ந்து தன் சட்டைப்பையிலிருந்து இருநூறு பவுன் பெறுமான நோட்டுகளை எடுத்துக்கொடுத்தான். டாக்டரும் அதை எடுத்துத் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு இராஜம்மாள் கொடுத்ததைவிட இரண்டு மடங்கு அதிகமான தொகை கிடைத்தது கண்டு மனத்தில் மகிழ்ந்தவனாய் ஜகதீசனைக் கண்டு, "ஆம்; இளவரசி கர்ப்பவதியாய் இருந்து ஒரு குழந்தையைப்பெற்றாள் என்பது வாஸ்தவமே. அது பிறக்கும் போதே" என்றான்.

இதைக்கேட்டதும் ஜகதீசன் திடுக்கிட்டு மனக்கலக்கமடைந்தான். இளவரசி கற்பைக் கெடுத்துக்கொண்டவளா? என்னும் சந்தேகம் உதித்தது. எனினும் விஷயத்தைப் பூராவாக அறிந்துகொள்ளுமுன் எத்தகைய முடிவுக்கும் வரலாகாதென நினைத்து, "இந்த விஷயம் எந்த சந்தர்ப்பத்தில்

எப்படி நடந்தது என்னும் விவரம் முழுதையும் தயவுசெய்து விளக்கிக்கூறு" என்று கேட்டான். டாக்டர் மணவாளனும் தனக்குத் தெரிந்த எல்லா விஷயத்தையும் விவரமாகக் கூறினான். டாக்டர், தன்னிடம் இராஜம்மாள் வந்து அட்வான்சு கொடுத்துவிட்டுப் போனதையும், பிறகு ஒருநாள் இரவு அவனுடைய கண்களைக்கட்டி அவனை அழைத்துச் சென்றதையும், சிறு பிரகாசத்துடன் கூடிய விளக்கையுடைய ஒரு அறையில் ஒருமாது இறந்துபோன பெண் குழந்தையைப் பெற்றதையும், அப்போது இருபெண்கள் மண்டியிட்டு பிரசவித்தமாதை "அன்புள்ள இளவரசியே" என்று கூப்பிட்டதையும், அவன் திரும்பி வருகையில் தோட்டத்தில் மனிதர்களின் காலடி சத்தம் கேட்டதையும், உடனே ஒரு வண்டி ஓடியதையும், தான் கண்கட்டை அவிழ்த்துக் கொண்டு தன் வீடுவந்து சேர்ந்ததையுமாக எல்லா விவரங்களை சாங்கோபாங்கமாய்க் கூறினான்.

ஜக:—உன்னை அழைத்துச் சென்ற அவ்வறையில் நீ இருக்கும்போது மெதுவாக உன் கண்கட்டை விலக்கிப் பார்க்க முயற்சிக்கவில்லையா?

மண;—ஆம்; பார்த்தேன். எவனுக்கும் அவ்வாறு பார்க்க வேண்டுமென்னும் உணர்ச்சி உண்டாகுமல்லவா?

ஜக:—அப்போது நீ அங்கு பிரசவித்த அம்மாதின் முகத்தை நன்றாகக் கவனிக்கவில்லையா?

மண:—இல்லை, கவனிக்கவில்லை.

ஜக:—ஆனால் பிரசவித்த அம்மாதை "அன்புள்ள இளவரசியே" என்று அழைத்த அப்பெண்கள் இருவரும் அம்புஜமும் ஜானகியும்தான் என்று நீ நிச்சயமாகக் கூறமுடியுமா?

மண:—ஆம், அவர்கள்தான் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அடிக்கடி இளவரசியுடன் அந்த ஏரிக் கரையில் நடந்துசெல்வதை நான் கவனித்திருக் கிறேன்.

ஜக:—சரிதான்; உன்னை அழைத்துச் சென்றவளும், இக் காரியங்களை யெல்லாம் நிர்வகித்தவளும் இராஜம்மா ளென்னும் பெயரையுடைய மாதுதானு?

மண:—ஆம்; அவள்தான். அவளையும் நான் அந்த அறை யில் கண்டேன். அவளை ஒருமுறை பார்த்துவிட்டால் பிறகு மறக்கவேமுடியாது.

ஜக:—அப்படியானல் இன்னும் ஒரே ஒரு கேள்விதான் இருக்கிறது. அதற்கும் பதில் சொல்லிவிடு. அம் மாளிகையில் உன் காரியங்கள் முடிந்தபிறகு உன்னை வெளியில் கொண்டுவந்து விடவந்த இராஜம்மாள், குழந்தையின் பிரேதத்தை வைத்துக்கொண்டிருக்கும் மற்ருெரு மாது வரவில்லையென்றும், அவளைப் பார்த்து விட்டு வருவதாகவும் சொல்லி உன்னைத் தனியே நிறுத்திவிட்டாளல்லவா?

மண:—ஆம், அப்போது நடந்தவிவரம் வேறு. அது ஒரு பெரிய ரகசியமல்லவா?

ஜக:—சரிதான். அந்தப் பெரிய ரகசியத்தையும் விவரமாகச் சொல். அவ்விவரத்துக்குத் தக்கபடி ஒரு நியாயமான ஒரு தொகையை நான் கொடுப்பேன். பணத்தைப்பற் றிக் கவலைப்படாமல் என்னிடம் சொல்லவேண்டிய விஷயங்களையும் சொல்லிச் செய்யவேண்டிய உதவி களையும் செய். உன் கஷ்டத்துக்குத்தக்க சன்மானம் பெறுவாய்.

மணா:—சரி; நான் எல்லாவற்றையும் கூறுகிறேன். நீ கவனமாகக் கேள். நான் சையன்ஸ் என்னும் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் தீவிரமாக இறங்கியிருப்பதாலும், இது விஷயமாய் வெளிநாட்டாருடன் கூடி அதிக அறிவுபெற முயற்சிப்பதாலும், அவ்வாராய்ச்சிகளுக்காக இறந்த மனிதர்களின் தலைகளைச் சேகரிக்கவேண்டியிருப்பதாலும் எனக்கு தொப்பன், தொம்பன், வெறியன் என்னும் மூன்று முரடர்களின் சகவாசமிருக்கின்றது. அவர்கள் பணம் மட்டும் கொடுத்துவிட்டால் எப்படிப்பட்ட காரியத்தையும் சாதித்தே தீருவார்கள். அவர்களை இரத்தினபுரியைச் சேர்ந்த இரண்டு ஆடவர்கள் ஒருநாள் இரவு அமர்த்திக்கொண்டு இளவரசியின் மாளிகையிலிருந்து இரண்டு பெண்களைத் தூக்கிக் கொண்டு வந்துவிடும்படி கட்டளையிட்டார்களாம். அன்று இரவுதான் நான் அங்கு என் இரகசிய வேலையைச்செய்து முடித்துக்கொண்டிருந்தேன். அந்த முரடர்கள், இரண்டு பெண்களைத் தூக்கிச்செல்வதற்குப் பதிலாக இராஜம்மாளையும், குழந்தையின் பிரேதத்தை வெளியில் கொண்டுவந்த மற்றொரு மாதையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள்.

ஜக:—அவ்வாறு தூக்கிச்செல்லப்பட்ட மற்றொரு மாது, குழந்தையின் பிரேதத்தைக் கொண்டுவந்தவள்தான் என்று உனக்கு எப்படித்தெரியும்? அந்த முரடர்களுக்கு இவ்வளவு இரகசியங்களும் தெரிந்திராததலால் அவர்களும் அடையாளம் கண்டுபிடிக்க முடிந்திராதே.

மணா:—ஆம்; அவர்கள் கூறவில்லை. ஆனல் அக்காரியம் நிகழ்ந்த சொற்பதினங்களுக்குப் பிறகு இராஜம்மாள், இந்த இரகசியங்களை வெளியில் சொல்லவேகூடாதென

வற்புறுத்துவதற்கு இங்கே வந்தபோது அவ்விஷயத்தை விவரமாகத் தெரிவித்தாள். இது இவ்வளவு இரகசியமான விஷயமென்பது எனக்கு இப்போது தெரிகிறது.

ஜகதீசன்:—இராஜம்மாள் உன்னிடம், பிரேதத்தைக் கீழே கொண்டுவந்த அம்மாதின் பெயரைக் கூறினளோ?

மண:—ஆம்; கூறினள். அம்மாதின் பெயர் வண்ணாத்தி சுவர்ணம் என்று சொன்னள். அவள் இளவரசியின் மாளிகையில் அனைவருக்கும் வண்ணாத்தியாம்.

ஜக:—பிறகு அக்குழந்தையினுடைய பிரேதத்தின் கதி என்ன ஆயிற்று என்பது உனக்குத் தெரியுமோ?

மண:—ஓ! இக்கேள்வியை நீ கேட்டதனல் அன்று இரவே நடந்த வேறொரு சம்பவம் என் ஞாபகத்துக்கு வருகிறது. அச்சம்பவத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டேனே யன்றி எனக்கு நேராக ஒன்றும் தெரியாது. ஆனல் அப்பிரேத விஷயம் ஒருவிதமாகத் தீர்ந்துவிட்டிருப்பதற்கும் அச்சம்பவம் காரணமாக இருக்கலாம்.

ஜக:—நீ முன்னமே என்னிடம் இருநூறு பவுன் பெறுமான இரகசியங்களைக் கூறினய். இந்தா! இதோ மற்றொரு நூறுபவுன் நோட்டுகள். இன்னும் உனக்குத் தெரிந்த இரகசியங்களைக் கூறிவிடு. பண விஷயத்தில் சிறிதும் கவலைப்படவேண்டாம். இரகசியம் வெளி வருவதற்குத் தக்கபடி பணம் கொடுக்கப்படும்.

மண:—சாதாரணமாகவே இரத்தினபுரி பிரபுக்கள் மிக்க தாராளமாகச் செலவு செய்பவர்கள் என்று நான் கேள்விப்பட்டபடியே நீயும் நடந்துகொள்கிறய். சரி; அதிருக்கட்டும். அன்று இரவே நடந்த மற்றொரு

சம்பவத்தைப் பற்றியல்லவோ இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன். அன்று இரவு இரண்டுமணிக்கு அங்கே, மனிதப் பிரேதங்களை இழுத்துச்செல்லும் முரடர்களைக் கைதுசெய்வதற்காகக் காத்துக்கொண்டிருந்த போலீசார், அப்போது அங்கு சென்ற ஒரு யௌவன மாதைக் கைதுசெய்தார்கள். அம்மாதை அவர்கள் இரவு விசாரணைக் கர்த்தாவிடம் அழைத்துச் சென்றனர். அவள் தன் பெயர் அம்புஜம் என்று தெரிவித்தாளாம். அவள் வேடிக்கையாக உலாவும் பொருட்டு ஏரிக்கரைக்குச் சென்றதாகவும், அங்கே தன் காலடியில் அகப்பட்ட ஒரு கல்லைத் தமாஷையாக ஏரியில் போட்டதனால் சத்தமுண்டாயிற்றென்றும் கூறினளாம். உடனே அந்த விசாரணைக்கர்த்தா அவளை நல்ல ஜாமீன் தரும்படி கேட்டதில் அவள், இளவரசியின் மாளிகையிலுள்ளார்க்கு ஜவுளிகளைச் சப்ளைசெய்யும் ஒரு வியாபாரியின் பெயரையும் விலாசத்தையும் தெரியப்படுத்தியதாகவும், போலீசார் அவ்வியாபாரியை அழைத்துச் சென்று கேட்டதில் அவர் ஜாமீன் கொடுத்ததாகவும் தெரிகிறது. அந்த வியாபாரி என் மைத்துனரானதால் எனக்கு இவ்விஷயம் தெரிந்தது. ஆதலின் இறந்துபோன குழந்தை பிறந்த இரண்டு மூன்றுமணி நேரத்துக்குள் அம்புஜம் ஏரிக்கரையில் இருந்தாளென்றும், அவள் எதையோ தண்ணீரில் வீசி எறிந்தாளென்றும் தெரிவதால் அக்குழந்தையின் கதி யாதாயிருக்க வேண்டுமென்பதை நீயே அறியலாமல்லவா?" என்றான்.

அப்போது ஜகதீசன், "நீ தயவுசெய்து அந்த ஜவுளி வியாபாரியின் பெயரையும் விலாசத்தையும் அறிவிப்பாயோ?"

என்று கேட்டான். இதைக்கேட்ட டாக்டர் மணவாளன் எங்கே விஷயங்களெல்லாம் வெளியிடப்பட்டுவிடுமோ என்று அஞ்சி, "கடவுளே! நான் சொன்ன விஷயங்கள் வெளியாகாதல்லவா? இப்படிப்பட்ட இரகசியப் பிரசவங்களுக்கு உதவி செய்யும் டாக்டர்களுக்கு பரிதிபுரத்தின் வழக்கப்படி பத்து வருஷ கடினகாவல் தண்டனை விதித்துவிடுவார்கள். மேலும் இம்மாதிரியான கேஸ்களைக்கொண்டே நான் வருவாய் பெற்றுவருவதால் இனி என் பிழைப்பில் மண்விழுந்துவிடும்," என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அதற்கு ஜகதீசன், "டாக்டரே! இதைப்பற்றியெல்லாம் உனக்கு எவ்வித கஷ்டநஷ்டங்களும் ஏற்படாதென்று உறுதியாய்க் கூறுகிறேன். இப்போது இந்த விஷயமாக நான் எப்படி நடந்துகொள்ளப்போகிறேன் என்பதுபற்றி உன்னிடம் விவரமாக சொல்லமுடியாமைக்காக வருந்துகிறேன். ஆனால் உனக்கு எப்படிப்பட்ட ஆபத்தும் வாராதென்பது நிச்சயம். ஆகையால் எத்தகைய அச்சமுமின்றி இதோ இந்த ஐம்பது பவுன் நோட்டுகளைப் பெற்றுக்கொண்டு அந்த ஜவுளி வியாபாரியின் விலாசத்தைத் தெரிவி" என்று கேட்டான்.

பணம் கொடுத்ததையும், எத்தகைய ஆபத்தும் வாராதெனக் கூறியதையும் கேட்ட மணவாளன் அதிக சந்தோஷமும் தைரியமுமடைந்து, "ஓ! நீ மிக்க நல்லவனாகவும் தாராள நோக்கமுடையவனாகவும் இருக்கின்றாய். இதோ இக்கடிதத்தில் ஜவுளி வியாபாரியின் விலாசம் இருக்கிறது, எடுத்துக்கொள்" என்றுகூறி விலாசத்தையும் கொடுத்தான். அப்போது ஜகதீசன் மணவாளனைப் பார்த்து, "ஐயா, இன்னும் ஒரே ஒரு வார்த்தை" என்று ஏதோசொல்ல ஆரம்பித்தபோது மணவாளன் திடீரென்று எதையோ நினைத்துக்கொண்

டவன்போல், "ஆ! நீ என்னிடம் இவ்வளவு கேட்கவேண்டியதில்லையே! இரவு விசாரணைக் கர்த்தாவின் காரியாலயம் சென்றால் அங்கே எல்லா விஷயங்களையும் புஸ்தகத்தில் குறித்து வைத்திருப்பார்கள். அரைபவுன் கட்டணம் செலுத்தினால் நீ அதையெல்லாம் பார்க்கலாம். அதனால் அந்த சமாசாரம் முழுவதும் நன்றாய் விளங்கிவிடுமே" என்று கூறினன்.

அதற்கு ஜகதீசன் இன்னும் அதிகமான செய்தியைத் தெரிவித்ததற்காக அனேக வந்தனம் செலுத்திவிட்டு, எனினும் ஒரு வார்த்தைக்குப் பதில் சொல்லவேண்டுமெனச் சொல்லி, வெறியன், தொம்பன் முதலிய முரடர்களைத்தான் எங்கே எப்போது சந்திக்கலாம் எனக்கேட்டான். அதற்கவன், "மாலையில் இருட்டிய பின்னர் எப்போதும் ஏரிக்கரையின்மீது நடந்து சென்றால் பழைய படகுக்காரியாலயம் இருந்த இடத்தில் அந்த மூவரும் வாயாடிக்கொண்டு உட்கார்ந்துகொண் டிருப்பார்கள்," என்று கூறினன். அச்சமயத்தில் யாரோ ஒருவர் அவர்கள் உட்கார்ந்துகொண்டிருந்த அறையின் கதவைத்தட்டவே கதவைத் திறந்துபார்த்ததில் டாக்டரின் சேவகன் வந்து, பரிதிபுரத்தில் அடிக்கடி இதாமாகாணவாசிகள் வந்து தங்கும் ஒரு ஒட்டலில் டாக்டரின் வருகை அவசியமும் அவசரமுமென்று யாரோ ஒருவர் வந்திருப்பதாகத் தெரிவித்தான். ஆகவே டாக்டரும் ஜகதீசனுடைய அனுமதிபெற்று வெளியே சென்றான். அப்போது அங்கே தனியாக இருந்த ஜகதீசன் தன் காதலியாகிய கோமளவல்லிக்குத் தன்னுடைய நிலைமையைப்பற்றியெல்லாம் விவரமாகக் கடிதம் எழுதியதுடன், மற்றும் தன் வேலையை எவ்வாறு முடிக்கலாமென்பது பற்றியும் சிந்திக்கலானன்.

இவ்வாறாக நடுப்பகல் வரை காலங் கடத்திவிட்டுப் பின்னர் அவன் மற்றொரு தனியறைக்குச் சென்றான். அங்கே அந்நேரத்துக்கு வந்திருப்பதாக ரமாமணி அம்மாள் முன் நாள் இரவே சொல்லியிருந்தபடி வந்து காத்திருந்தாள். அவள் செத்த சவம்போல் வெளுத்த முகத்துடன் மிக்க நோயாளிபோல் காணப்பட்டாள். அதற்கு முன்நாள் மாலை ஏரியில் மூழ்கியதாலும், திடீரென்று எதிர்பாராத ஒருவர் காப்பாற்றிவிட்டதாலும் அவள் மிக்க அதிர்ச்சியடைந்திருந்தாள். எனினும் அவள் ஜகதீசனைப் பார்த்ததும் புன்முறுவலுடன் வரவேற்றாள். அப்போது அவன், "நீ அதிக காயலாவாய் இருப்பதுபோல் காணப்படுகிறதே" என்று கேட்காமலிருக்க முடியவில்லை. அதற்கவள், "ஆம்; நேற்று நடந்த சம்பவத்தால் நான் அதிக அதிர்ச்சி யடைந்திருக்கிறேன். எனினும் நாளை பகல் என் உடம்பு சொஸ்தமாய்விடும். அப்போது நான் உன் கடிதத்தை எடுத்துக்கொண்டு இரத்தினபுரி இளவரசியின் மாளிகைக்குச் செல்வேன். ஆதலின் நீ என்னை அனுப்பும் காரியத்தை நாளைவரை ஒத்தி வைக்கவேண்டும்," என்று கூறினாள்.

அதற்கு அவன், "இன்று உன்னால் செய்யமுடியாத ஒரு காரியத்தை இன்றே செய்யும்படி வற்புறுத்தக்கூடிய முட்டாள் நான் அல்ல. ஆகையால் அவ்வாறு வீணான தொந்தரை செய்யமாட்டேன்" என்று சமாதானம் கூறினான். பிறகு அவன் அன்று காலை டாக்டர் மணவாளனிடமிருந்து குமாரவேல்பிரபு, கர்னல் மாரப்பன் இவர்கள் விஷயமாகவும், வெறியன் முதலிய முரடர்கள் இரண்டு மாதர்களை இளவரசி மாளிகையினின்றும் தூக்கிச்சென்ற விஷயங்களையும் அறிந்துகொண்டதை விவரமாய் அறிவித்தான். அவன் இரத்தினபுரி பிரபுக்களைப்பற்றிப் பிரஸ்தாபித்தபோது ரமா

மணி அம்மாள் முகத்தில் துக்கக்குறி தோன்றியதைக் கண்டதால் அவ்விருவரில் யாரேனும் ஒருவர்தான் அவளுடைய காதலனாக இருக்கவேண்டுமென்று யூகித்தான்.

இவனுடைய எண்ணத்தை, அகத்திலுள்ளது முகத்தில் தெரியும் என்பதுபோல் முகக்குறியால் அறிந்து கொண்ட ரமாமணி அம்மாள், "ஐயா, நான் மனதில் நினைத்ததையெல்லாம் நீ அறிந்துகொண்டுவிட்டதாகத் தெரிகிறது. நீ எப்படியாவது என்னைத் துரோகம்செய்த என் காதலனுக்கும், இளவரசியின் தோழிகளில் ஒருத்தியான ஜானகிக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றிய முழுவிவரத்தையும் விசாரித்து விடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள்.

அதற்கு அவன், "ஆம்; எல்லாவற்றையும் விசாரித்துத்தான் ஆகவேண்டும். என் விசாரணைக்கும் அவைகளெல்லாம் முக்கியமே. இரத்தினபுரியிலேயே சில அயோக்கியர்கள் சூழ்ச்சிசெய்தே இந்த மூன்று சகோதரிகளையும், இளவரசியின்மீது பழி ஏற்படுத்தும் பொருட்டே நியமித்தனர். அவர்கள் செய்யும் சூழ்ச்சிதான் இவ்வளவு கொடுமையானதாயிருக்கிறது. அம்மூன்று சகோதரிகளும் யோக்கியர்களல்லவென்பதை ருஜுப்பிக்கவேண்டியது என் கடமையல்லவா? ஆதலின் எல்லாவற்றையும் விசாரித்துவிடுவேன். அதைப்பற்றி நீ கவலைப்படாதே" என்றான்.

இதைக்கேட்ட ரமாமணி அம்மாள், "ஐயா, நீ நகர விசாரணைக் காரியாலயம் சென்று அங்குள்ள போலீஸ் புஸ்தகத்தைப் பார்த்தால் இரத்தினபுரி பிரபுக்களாகிய அவர்களின் மர்மங்களெல்லாம் தெரிந்துவிடும். முக்கியமாகக் குமாரவேல் பிரபுவைப்பற்றிச் சில இரகசியங்களும் உனக்குத் தெரிவிக்க என்னால் முடியும். அவர் பரிதிபுரத்

தில் தங்கியிருந்தபோது எந்த வீட்டில் அறையை வைத்துக்கொண்டிருந்தாரோ அதன் விலாசம் இதோ இருக்கிறது. நீ அங்குபோனல் இளமையும் அழகும் வாய்ந்த ஒரு பெண் உன்னை வரவேற்பாள். பாவம்! அப்பெண்ணின் கதியும் என்னுடையதைப்போலவே இருக்கிறது. என்னை ஏமாற்றித் துரோகம் செய்ததுபோலவே குமாரவேல்பிரபு அப்பரிதிபுரப் பெண்ணையும் ஏமாற்றி வஞ்சித்துவிட்டிருக்கிருன். அதனுல் அவள் மிக்க விசனமடைந்து மெலிந்துவிட்டிருக்கிருள். ஆனுல் அவர் அவளிடம் இன்னும் மிக்க கேவலமாக நடந்துகொண்டிருக்கிருர். அவருக்குக் கலியாண மாயிருக்கிறதென்று தெரிந்தே நான் வேண்டுமென்றே பள்ளத்தில் விழுவதுபோல் விழுந்தேன். ஆனுல் அவர் பரிதிபுரத்து இப்பெண்ணினிடம் தனக்குக் கலியாணமாகவில்லை என்றுசொல்லி ஏமாற்றியதாகத் தெரிகிறது. மேலும் அவர் பிரபு வமிசத்தைச் சேர்ந்தவரென்பதையும் அறியாமல் அவருடைய மனைவியாய்விடலாமென நினைத்து அவருடைய இச்சைக்கு இணங்கிவிட்டாள். அவர் அங்கு தங்கியிருக்கும்போது பற்பல இரவுகளில் அவர் வீட்டில் தங்கியதில்லை. அப்போதே அவளுக்குச் சந்தேகம் தோன்றிற்றென்ருலும் அவர் கூறிய சமாதானங்கள் ஒருவாறு திருப்தியை அளித்தன. ஆனுல் நாளடைவில் அவளுக்குச் சந்தேகமும் பொருமையும் அதிகரித்துவிட்டபடியால் ஒருநாள் இரவு அவள், அவருக்கும் தெரியாமல் அவரைப் பின்தொடர்ந்து சென்ருள். அவர் இளவரசியின் மாளிகைக்குச் சென்றபோது அவளும் உடன்சென்று பார்த்தாள். குமாரவேல்பிரபுவுக்கும் ஜானகிக்கும் சம்பந்த மிருக்கிறதென்பதையும் நேரில் கண்டுகொண்டாள். எனினும் அவள் அதைப்பற்றிக் கவலை செலுத்தாமல் தன் காதலனுக்குக் கோபம் வரலாகாதென்னும் எண்ணத்துடன் பணிவாகவே நடந்துகொண்டுவந்தாள்.

எனினும் திடீரென்று காதலன் அவளிடம் சொல்லாமலும் வெளியூர் சென்றுவிட்டதை யறிந்து விசனமடைந்தாள். ஆகவே அழகானவளா யிருந்தாலும் அதிக துக்கமுடையவா யிருக்கிறாள்'' என்றாள்.

அதற்கு ஜகதீசன், "ஐயோ பாவம்! அந்தப் பெண்ணின் கதி அப்படியா ஆயிற்று. நான் இரத்தினபுரியிலிருந்து கொண்டுவந்திருக்கும் கடிதம் இளவரசியிடம்போய்ச் சேருகிறவரை நான் இங்கு வெளியில் திரிவது சரியல்லவாதலால் இன்று வெளியில் போகாமல் இங்கேயே இருக்கிறேன். என்னை இளவரசியின் மாளிகையிலுள்ளவர்கள் யாரேனும் பார்த்துவிட்டால் பிறகு அவர்கள் என் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க ஆரம்பித்துவிடுவார்கள். விஷயமொன்றும் வெளியாகாமற் போய்விடும். என் வேலை சரிவர முற்றுப்பெறாது. எனினும் இன்றிரவு நான் வெளியில்போய் உன் காதலன் சம்பந்தமான முழுவிவரங்களையும் விசாரித்து விட்டு வருவேன்'' என்றான்.

அப்போது ரமாமணி அம்மாள், "பாவம்! அந்த பரிதிபுரப் பெண்ணின் வீட்டுக்கும் சென்று அப்பெண்ணையும் பார்த்துவிட்டு வருவதுநலம். அவள் உன்னிடம் இன்னும் அதிகமான விஷயங்களைச் சொல்லலாம். நாம் இருவரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் அதிகம் நம்ப ஆரம்பித்துவிட்டபடியால் என் உண்மையான பெயரை உன்பால் சொல்லிவிடட்டுமா?'' என்று கேட்டாள்.

அச்சமயத்தில் டாக்டர் மணவாளன் திடீரென்று அங்கே தோன்றி ரமாமணி அம்மாளிடம் பின்வருமாறு கூறினான்:—மாதே! உனக்குத் துணையாக மற்றொரு மாது வந்திருக்கிறாள். என் விடுதியில் ஒரே ஒரு மாதை தங்கவைத்துக்கொண்டிருந்தால் எனக்கு வரும்படி கட்டாது. உன்னை

எந்த ஒட்டலில் சினேகம் பிடித்தானே அதே ஒட்டலில் தான் இன்று வேறொரு மாதின் நட்பைப்பெற்றேன். அவளும் இப்போது இங்கேவருவாள். என் விடுதியில் ஒரு கனவான் தங்கியிருப்பதாகவும் அவளிடம் தெரிவித்துவிட்டேன். அவளும் எத்தகைய ஆட்சேபமும் கூறவில்லை.''

அதைக்கேட்ட ஜகதீசன் ரமாமணியைப் பார்த்து, "அம்மையே! உனக்கு ஒரு துணை கிடைத்ததுபற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்'' என்றான். அதற்கு டாக்டர் மணவாளன், "அம்மாதும் உங்கள் நகரைச் சேர்ந்தவளே யாதலால் உங்களுக்குத் திருப்தியாகத்தான் இருக்கும். அவளும் அழகானவளாயும், நல்லவளாயும் இருக்கின்றாள். ஆதலின் தயவுசெய்து அம்மாது இங்கு வரும்போது ரமாமணி அம்மாள் அவளை வரவேற்கவேண்டும். புதிதாகவரும் மாதர்களை மாதர்களே வரவேற்பதுதான் ஒழுங்காகும். மேலும் அவர்கள் தாராளமாகக் கலந்துபேசி உறவாடிக் கொள்ளும் பொருட்டு அவர்களைச் சிலமணி சாவகாசம் தனியே விடுவதும் நியாயமாகும். ஆதலின் நீ, செல்வாம்பாள் எனப்படும் அம்மாதை வரவேற்று இன்று முழுதும் அவளுடன் காலத்தைக் கழி. நானும் ஜகதீசனும் ஆகாரம் உட்கொள்கிறோம்'' என்றான்.

டாக்டர் மணவாளன் கூறிய யோசனையை அனைவரும் ஒப்புக்கொண்டனர். ஆகவே அன்று பூராவும் ஜகதீசன் ரமாமணி அம்மாளைத் தனியாகக்கண்டு அந்தரங்க விஷயங்களைப் பேசக்கூடிய சந்தர்ப்பமே இல்லாமற்போய்விட்டது. பகல் முழுவதும் தன் அறையில் சில புஸ்தகங்களை வாசித்துக் கொண்டிருந்தான். மாலை ஐந்துமணிக்குச் சிற்றுண்டிக்குச் சென்றபோது டாக்டர் மணவாளன் ஜகதீசனிடம், செல்வாம்பாளென்னும் மாது வந்துவிட்டதாகத் தெரிவித்தான்.

சிற்றுண்டி முடிந்தபின்னர் ஜகதீசன் தன்னறைக்குச்சென்று இரண்டொரு மணி நேரத்தைக் கழித்துவிட்டுச் சுமார் ஒன்பது மணிக்கு வெளியில் புறப்பட்டான். இரத்தினபுரி இளவரசி சம்பந்தமான முழுவிவரங்களையும் விசாரித்தறியவே வெளியில் சென்றான்.

பகலில் மணவாளன் விடுதிக்கு செல்வாம்பாள் வந்துவிட்டிருந்தாள். அவளும் நல்ல அந்தஸ்தில் பிறந்தவளென்றே தெரிந்தது. நல்ல ரூபலாவண்யமுடையவள். அவள் வந்ததும் அவளை எதிர்கொண் டழைக்கச்சென்ற ரமாமணி அம்மாள் அவளைக்கண்டதும் பரஸ்பரம் இருவரும் ஒருவரையொருவர் அறிந்தவரேபோல் திடுக்கிட்டனர். இதை வேறு யாரும் அறியவில்லை. பிறகு ரமாமணி அம்மாளும், செல்வாம்பாளும் தனியே ஒரு அறையில் விடப்பட்டார்கள். அதில் ஒருத்தி, "இதுவும் சாத்தியமா?" என்று கேட்டாள். மற்றொருத்தியும் ஆச்சர்யத்துடன் அவ்வாறே கேட்டாள். பிறகு சிறிதுநேரம் இருவரும் மௌனம் சாதித்தனர். அப்போது அவர்களுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. பிறகு ரமாமணி அம்மாள், "சரி, இப்போது நாம் நமது பழைய விரோதங்களையெல்லாம் மறந்து ஒற்றுமையுடன் இருக்கக்கூடிய நிலைமையில் சந்தித்திருக்கின்றோம்" என்றாள். செல்வாம்பாளும், "ஆம்; வாஸ்தவம்தான்" என்று கூறவே இருவரும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டு நட்புரிமையைத் தெரிவித்துக்கொண்டனர். அவர்களை அப்படியே விட்டுவிட்டு ஜகதீசனைக் கவனிப்போம்.

127 - வது அத்தியாயம்

இரவு ஒன்பதுமணிக்கு டாக்டர் மணவாளன் வீட்டை விட்டுப் புறப்பட்ட ஜகதீசன் ஒரு வாடகை வண்டியை அமர்த்திக்கொண்டு போலீஸ் விசாரணைக் காரியாலயம் சென்று இரத்தினபுரியிலிருந்து பரிதிபுரம் வந்த இரு கனவான்களைப்பற்றி விசாரிக்க முயன்றான். காரியாலய வேளைக்குப் பின்னர் அவன் விசாரிக்க முயன்றதால் அதற்காக அவன் கட்டணம் செலுத்தவேண்டியதாயிற்று. அவன் கட்டணம் செலுத்தியதும் அங்குள்ள குமாஸ்தா அவனிடம் ஒரு காகிதத்தில் அவனுக்கு வேண்டிய விடைகளை எழுதிக் கொடுத்துவிட்டு, "இவ்வளவுதான் உமக்கு வேண்டியவிஷயமோ?" என்றுகேட்டான். அதற்கு ஜகதீசன் அவர்களைப்பற்றிய முழுவிவரமும் எனக்குத் தேவை. ஆகவே ஏதேனும் அதிக தகவல் தெரிவிப்பாயாயின் அதற்குத் தக்க சன்மானம் உனக்குச் செய்வேன்" என்றான். அப்போது அந்தக் குமாஸ்தா அங்குள்ள போலீஸ் குறிப்புப் புஸ்தகத்தையே அவனிடம் கொடுத்து எல்லாவற்றையும் படித்துக் கொள்ளும்படி சொன்னான். அதை வாங்கி அவன் படித்த போது கர்னல் மாரப்பனைப்பற்றி அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:—"அவர் இரத்தினபுரியிலிருந்து வந்தவர்; இரத்தினபுரி இளவரசியின் பரிவாரத்தினருக்குத் தெரியாமல் அவர்களுடன் சுற்றிக்கொண்டிருக்கிறார். நிறைய பணம் இருக்கிறது. அவருக்கு இரத்தினபுரியில் நல்ல பெயர் இல்லையெனத் தெரிகிறது. இவ்விடம் தலைமறைவாக வசிக்கிறார். பிரதிதினமும் இரவில் வெளியில்போய் இரத்தினபுரி இளவரசி தங்கியிருக்கும் மாளிகையின் அருகில் சுற்றித்

திரிகிறார். அம்மாளிகையில் சுவர் ஏறி உள்ளே குதித்த தாகவும் தெரிகிறது. இரவில் அம்மாளிகையிலேயே காலங் கழித்ததும் பலமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவ் விடம் கடன் வைத்துக்கொள்ளாமல் வெளியேறினார்.''

பிறகு ஜகதீசன் அதில் குமாரவேல் பிரபுவைப்பற்றி என்ன எழுதி யிருக்கிறதென்று அறியும்பொருட்டுப் பார்த் ததில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:—இரத்தினபுரியி லிருந்து அந்நகர இளவரசியின் பரிவாரத்தைத் தொடர்ந்தே வருகிறார். ஆனால் தனியான ஒரு இடத்தில் தலைமறை வாகப் பொது இடங்களில் கலந்துகொள்ளாமல் அந்தரங்க மாக வசிக்கிறார். இளவரசி மாளிகையில் ஏதோ ஒரு மாது டன் அடிக்கடி பேசுவதாகவும், மாளிகை சுவர் ஏறி உள்ளே சென்று சில இரவுகள் அங்கேயே கழிப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. நிறைய பணமுடையவராக இருப் பதால் கடன் எதுவும் வைக்காமல் வெளியூர் சென்றார்.''

இச்சங்கதிகளைக் கிரகித்துக்கொண்டு அங்குள்ள குமாஸ் தாவுக்குச் சன்மானம் செய்துவிட்டு வெளியேவந்து வாடகை வண்டியில் ஏறிக்கொண்டு ஊருக்கு வெளியிலுள்ள பெரிய ஏரிக்கரைக்குச் செல்லும்படி கட்டளையிட்டான். அவ்வாறு அங்கு போய்க்கொண்டிருந்த வழியில் பின்வருமாறு சிந்திக்க லானான்:—குமாரவேல்பிரபுவும், கர்னல் மாரப்பனும் இங்கே ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே அந்தரங்க மாகக் காலங் கழித்திருக்கின்றனர். இருவரும் இளவரசி யின் பரிவாரத்தைச் சேர்ந்த ஒவ்வொருத்திக்காக அலைந் திருக்கின்றனர். குமாரவேல் ஜானகி என்னும் பெண்ணுடன் சம்பந்தம் வைத்திருக்கிறானென்பது முன்னமே தெரிந்து விட்டது. ஆகவே கர்னல் மாரப்பனும் அச்சகோதரிகளில் வேறொருத்தியைப் பற்றி யிருக்கவேண்டும். அச்சகோதரிகள்

மூவரும் ஒழுக்கக் கேடுடையவர்கள்தானே. அப்பெண்கள் இந்த ஆடவர்களை மயக்கி இருப்பதால் தங்கள் காமத்தையும் தீர்த்துக்கொள்வதுடன் அப்பழியை இளவரசியின்மீது சுமத்தவும் சௌகரியமாயிருக்கிறதல்லவா? ஆகவே அவர்கள்தான் குற்றவாளிகள். இளவரசி பரிசுத்த இருதயமுடையவளே என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறாக ஜகதீசன் அவர்களைப்பற்றி ஒருவித முடிவுக்குவந்தான். அந்த முடிவு சரியானதே என்பதை வாசகர்களாகிய நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இவ்வாறு அவன் நினைத்துக்கொண்டபோது இரத்தினபுரி பிரபுக்களாகிய அவர்களிருவரின் செய்கைகளையும் மிக வெறுத்தான். மேலும் போலீசார் தங்கள் புஸ்தகத்தில், அப்பிரபுக்கள், வெறியன் தொம்பன் முதலிய ஆட்களை அமர்த்தி இளவரசியின் மாளிகையிலிருந்து இருமாதர்களைத் தூக்கிச்செல்ல முயற்சிசெய்த விஷயம் காணப்படாமையால் போலீசாரும் அவர்களுடைய முழு இரகசியங்களையும் சரிவர அறியவில்லை என்பதை அறிந்தான். ஆனால் அவர்கள் தூக்கிச்செல்ல முயன்ற மாதர்கள் அச்சகோதரிகளில் இருவராகவே இருக்கவேண்டுமென்பதில் சந்தேகமுமுண்டோ என்று நிச்சயித்தான். இவ்வாறு சிந்தித்துக்கொண்டே நமது ஜகதீசன் ஏரிக்கரை சென்று சேரவே வண்டிக்காரனுக்கு வாடகை கொடுத்து அனுப்பிவிட்டு ஏரிக்கரைமீது சிறிதுதூரம் நடந்து சென்றான். அப்போது இரவு மணி பதினொன்று. சிறிது நிலா வெளிச்சமிருந்ததால் அவன் சிறிதும் அச்சப்படாமல் சென்று அங்கே இருந்த பழைய படகுத்துறைமுகக் கட்டடத்தை யடைந்தான். அங்கு யாரேனும் பேசும் சத்தம் கேட்கிறதோ என்று உற்றுக்கேட்டான். ஆனால் ஏரி ஜலம் கரையில் மோதும் சத்தம் கேட்டதே தவிர வேறொன்றும் கேட்கவில்லை. பத்துநிமிஷங்கள் வரை காத்திருந்தான்.

வெறியன் முதலிய மூடர்களைக் காணாமையால் டாக்டர் வீட்டுக்குத் திரும்பிச் சென்று மறுநாள் இரவு வந்து தேடலாமா என்றும் நினைத்தான். ஆனால் அவன் தான் நின்றிருந்த இடத்தினின்றும் புறப்பட முயன்றபோது யாரோ சிலர் நடந்துவரும் சத்தம் கேட்டது. உடனே அவன் ஒருபுறமாக ஒதுங்கி நின்று அவர்களைக் கவனித்தான். மூவர் ஏதோ ஆயுதங்களை எடுத்துக்கொண்டு ஏரியில் இறங்கிச் செல்வதைக் கண்டான். அவர்கள் என்ன செய்கிறார்களென்பதையும், தான் எதிர்பார்க்கும் மனிதர்கள் அவர்கள் தானா என்பதையும் அறிந்துகொள்ளும் பொருட்டு அவர்கள் நடத்தையைக் கவனித்துக்கொண் டிருந்தான். அவர்கள் ஒரு நிமிஷமும் வியர்த்தமாக்காமல் உடனே தங்கள் வேலையில் இறங்கிவிட்டார்கள். அவர்கள் வலையைவீசி எறிந்து பிணத்தைப் பறிக்க முயன்றார்கள். சொற்பநேரம் அவர்கள் முயற்சி செய்தபின்னர் அவர்களில் ஒருவன் சந்தோஷத்துடன், "அண்ணே? அகப்பட்டது? எதுவோ பளுவாக இருக்கிறது" என்று கூறிக்கொண்டே வலையை அவசரம் அவசரமாக இழுத்தான். அதையெல்லாம் மறைவிலிருந்து பார்த்துக்கொண்டேயிருந்த ஜகதீசன் நிலாவெளிச்சத்தில் அம்மூடர்கள் ஏரியிலிருந்து வெளியிலெடுக்கப் பார்த்த பிரேதத்தின் முகத்தைக்கண்டான்.

அந்தப் பயங்கர பிரேதத்தைக் கண்டு ஜகதீசன் அருவருப்படைந்தான். அதே சமயத்தில் அவர்களுடைய வலையில் அகப்பட்ட பிரேதம் அலையால் தாக்குண்டு மீண்டும் ஏரியில் நழுவிவிட்டது. அப்போது ஜகதீசன் அவர்கள் எதிரில் வந்துநின்று அவர்களைக் கூப்பிட்டான். முதலில் அவர்கள் அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டு அவனிடம் செல்ல தயங்கினர். ஆனால் அவன் அம்மூடர்களுடைய பாஷையில், தான் ஒருவனே இருப்பதாகவும், எத்தகைய விரோத எண்

ணத்துடனும் வரவில்லையென்றும் தெரிவித்தன்மேல் அவர்கள் அவன் சமீபம் சென்று, 'ஐயா, நீ யார்? எங்களைக்கண்டு பிடிக்கவந்த வேவுகாரனு அல்லது தற்கொலை புரிந்துகொள்ள வந்திருக்கிருயோ, அல்லது நிலாவெளிச்சத்தில் உல்லாசமாக உலாவிச்செல்லவந்தவனு?' என்று கேட்டார்கள். அப்போது அவன் தைரியத்துடனும் நிதானமாகவும், 'நான் அப்படிப் பட்ட காரியங்களுக்காக வரவில்லை. ஆனல் நான் வெறியன் என்பவனைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன்' என்று கூறினன். அப்போது அவர்களில் ஒருவன், 'அப்படியா? வெறியன் உனக்கு எதற்காக வேண்டும். அதனல் அவனுக்கு நன்மைவிளையுமா? அல்லது தீமைவிளையுமா? நீ எதற்காக அவனைத் தேடுகிருய் என்பதைத் தெரிவித்தால் நான் உன்னை அவனிடம் அறிமுகம் செய்துவைப்பேன்? என்று கூறினன்.

அதற்கு ஜகதீசன், 'நான் எப்படிப்பட்ட கெட்ட எண்ணத்துடனும் அவனைத்தேடவில்லை. மேலும் அவனுக்கு நான் அதிக பணம்தருவேன். வெறியன் தன் சகாக்களுடன் இங்கே இந்நேரத்தில் இருப்பானென எனக்கு டாக்டர் மணவாளன்தான் தெரிவித்தார். ஆதலின் அந்த மனிதன் நீயே என்பதை இப்போதேனும் ஒப்புக்கொள்வாய் என நினைக்கிறேன்,' என்ருன்.

அப்போது அம்மனிதன் கூர்மையான பார்வையுடன் நாற்புறங்களிலும் சுற்றிப்பார்த்து அங்கே யாரேனும் போலீஸ்காரர்கள் இருக்கிருர்களோ எனப்பார்த்து யாருமில்லையென்று தெரிந்தபின்னர் தைரியமாக, 'சரி; நான்தான் வெறியன்; இதோ இவர்களிருவரும் என் சகாக்களான தொப்பனும் தொம்பனுமானவர். உன்னிடம் இப்போது எங்களுக்குச் சந்தேகமில்லை. உன்னைப்பார்த்தால் மிகவும் நல்லவன்போலக் காணப்படுகிறது. இங்கே இருக்கக்கூடாது.

அதோ அந்தக்கட்டடத்தின் ஓரத்தில்போய் நின்றுகொள்வோம். உன்னைப்பார்த்தால் இரத்தினபுரி கனவானைப் போலக் காணப்படுகிறது. அவர்கள் எப்போதுமே தாராளமாகக் கொடுக்கக்கூடியவர்கள் என்பது எங்களுக்குத்தெரியும் ஆதலின் உன்னைச் சந்தோஷமாக வரவேற்கிறோம்' என்று கூறினன்.

இதற்குள் அவர்கள் நால்வரும் கட்டடத்தின் ஓரமாக மறைவில்போய்ச் சேர்ந்தார்கள். அங்கு இருட்டாகவும் இருந்தது. தங்களை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள் என்னும் தைரியமும் அவர்களுக்கிருந்தது. அப்போது ஜகதீசனும் தைரியமாகவே இருந்தான். ஏனெனின் முதலாவதாக அவனுக்கு அச்சமென்பதே இன்னதென்று தெரியாது. இரண்டாவதாக அவர்கள் அவனை ஏதேனும் செய்ய வேண்டுமென்று விரும்பினுல் அவன் எங்கிருந்தாலும் அவர்களுக்கொன்றுதான் என்பதையும் அவன் அறிந்திருந்தான். அப்போது ஜகதீசன் அவர்களைநோக்கி, 'ஐயா, இரத்தினபுரி கனவான்கள் தாராளமாகக் கொடுக்கக்கூடியவர்களென்றும், அவர்களில் சிலரை நீங்கள் பார்த்திருப்பதாகவும் கூறினீர்களே. அதெப்படி? சில வாரங்களுக்கு முன் இருகனவான்கள் உங்களை அமர்த்திக்கொண்டு இளவரசியின் மாளிகையினின்றும் இருமாதர்களைத் தூக்கிக்கொண்டுவரும்படி சொன்னார்களே அதைத்தானே கூறுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

அதற்கு அவர்கள், "ஆம்; அதைத்தான் கூறுகிறோம். ஆனால் நீ அவ்விருகனவான்களைச் சேர்ந்தவனல்ல'' என்றார்கள். அப்போது ஜகதீசன், "நான் அவர்களைச் சேர்ந்தவனல்ல என்பது மெய்தான். நான் வேண்டுவதெல்லாம் அதைப்பற்றிய முழுவிவரமே'' என்று கூறினன். அதற்கு

வெறியன் என்பவன், "ஐயா, நாங்கள் உன்னிடம் அவ் விஷயங்களைக் கூறுவதற்குமுன் நீ நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகள் இரண்டு உண்டு. அதாவது நீ ஏன் அதை யெல்லாம் கேட்கிறாய் என்பதை ஒளிமறைவின்றிச் சொல்ல வேண்டும்; இரண்டாவது, நாங்கள் சொன்னால் எங்களுக்குத் தக்க சன்மானம் கொடுக்க உன்னால் முடியுமென்பதையும் ருஜுப்படுத்தவேண்டும்" என்றான்.

வெறியன் கூறியதைக்கேட்ட ஜகதீசன், "ஐயா, நீ என்னிடம் இச்செய்திகளைக் கூறுவதால் உனக்கு எப்படிப் பட்ட ஆபத்தும் வராதென்று உறுதியாகக் கூறுகிறேன். அவ்வளவு தெரிந்தால் போதுமல்லவா? மற்ற விஷயங்கள் உனக்குத் தெரியவேண்டியதில்லை. இரண்டாவதாக உங் களுக்குச் சன்மானம் செய்வதற்கென்று இதோ இருபது பவுன்களை வைத்துக்கொண்டிருக்கிறேன். உன் கையைக் கொடு. அத்தொகையைக் கொடுத்துவிடுகிறேன்" எனக் கூறிக்கொண்டே இருபது பவுன்களையும் வெறியன் கையில் கொடுத்துவிட்டான். வெறியன் அந்த நாணயங்களைத் தட் டிப்பார்த்து தன் இடுப்பில் முடிந்துகொண்டான். அம்மூடர்கள் மூவரும் ஒருவருடன் ஒருவர் ஜகதீசன் கொடுத்த தொகையைப்பற்றிப் பேசிக்கொண்டு சந்தோஷப்பட்டனர்.

பிறகு அவர்களில் ஒருவரான வெறியன் பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தான்:—"சில வாரங்களுக்குமுன்னர் குமார வேல் என்பவர் எங்களிடம் வந்து அறிமுகம் செய்துகொண்டு நாங்கள் அவருக்கு ஒரு ரகசியவேலை செய்யவேண்டுமென எங்களை அமர்த்திக்கொண்டார். இரவு ஒன்பது மணிக்கு நான்கு குதிரை பூட்டிய பெரிய வண்டியைக் கொண்டுவந்து இரத்தினபுரி இளவரசியின் மாளிகையின் பக்கத்தில் நிறுத்தி விட்டு, அதிலுள்ள இரண்டு யௌவன மாதர்களைத் தூக்கிக்

கொண்டு வண்டியில் போட்டுப் பல மைல்களுக்கப்பாலுள்ள ஒரு சிற்றூருக்குக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்கள். அம்மாதர்கள் இருவரும் மாளிகையின் உட்புறத் தோட்டத்தில் ஒவ்வோரிடத்தில் நின்றுகொண்டிருப்பார்களென அறிவித்தார்கள். நாங்கள் அவர்களைப் பிடித்து அவர்கள் வாயைத் துணியால் கட்டி அவர்கள் வாய்திறவா வண்ணம் செய்ய வேண்டுமென்றும், நாங்கள் அவர்களுக்கு முத்தமிடலாகாதென்றும், அவ்வேலையை அவர்களே பார்த்துக்கொள்வதாகவும் கூறினார்கள். ஆனால் அதில் தவறு நிகழ்ந்துவிட்டது. அம்மாளிகையிலிருந்து நாங்கள் தெரியாமல் இருகிழவிகளைத் தூக்கிச் சென்றுவிட்டோம். ஆகவே அவர்களை அந்தச் சிற்றூருக்குக் கொண்டுபோன பின்னர் அவர்களைத் திரும்பிக்கொண்டு வந்து விட்டுவிட வேண்டியதாயிற்று. அக்காரியத்தை ஏற்றுக்கொண்டதால் எங்களுக்கு எப்படிப் பட்ட துன்பமும் விளையலாகாதென முன்னமே பேசிக்கொண்டபடியே எங்களுக்கு இதுவரை அவ்விஷயமாக ஒரு தொல்லையும் ஏற்படவில்லை.''

இதையெல்லாம் கேட்ட ஜகதீசன், ''சரிதான். அதுவரை சந்தோஷமே. அந்தக் காரியம் நடந்ததற்குப் பிறகு நீங்கள் இந்த ஏரியில் பிரேதவேட்டை யாடுகிறீர்களே! உங்களுக்கு ஏதேனும் கிடைத்ததோ?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள் அதுமுதல் போலீஸ்காரர் தொல்லை அதிகமாய்ப் போய்விட்டதால் வேண்டுமென்றே இந்த வேலைக்கு வரவில்லையென்றும், அன்றுதான் முதலாவதாக வந்திருப்பதாகவும் அறிவித்தார்கள். அப்போது அவன், ''ஐயா, இரண்டு மூன்று வாரங்களுக்குமுன் அப்போதுதான் பிறந்த ஒரு குழந்தையின் பிரேதம் இதில் எறியப்பட்டிருக்கிறது'' என்றான். அதற்கு அம்முரடன், ''ஓஹோ! அப்

பிரேதத்தை இப்போது நாங்கள் இழுத்துத்தரவேண்டும் என் கிருயோ? அப்பிரேதத்துடன் ஒரு கல்லேக்கட்டிப் போட் டிருந்தால் அது உண்மையிலேயே அடியிலேயே இருக் கும்" என்ருன். அச்சமயம் ஜகதீசன், "அப்படியானல் காலத்தைப் போக்காமல் உடனே உங்கள்வேலையை ஆரம்பி யுங்கள். அப்பிரேதத்தை இழுத்துக் கொடுத்தால் உங் களுக்கு மீண்டும் இருபதுபவுன் தருவேன்" என்று கூறி ஞர்.

அவர்கள் மூவரும் ஒருவரோடொருவர் சிறிதுநேரம் பேசிக்கொண் டிருந்தபின்னர் வெறியன் ஜகதீசனிடம், "ஐயா! நாங்கள் பயங்காளிகளல்லவென்ருலும், எங்களுக்குத் தேவையானது பணமே என்ருலும், நீ எதற்காக அப்பிரே தத்தைக் கேட்கிருய் என்பதை அறியாமல் கண்ணைமூடிக் கொண்டு எங்களுக்குத் தெரியாத இருட்டில் புக எங்களுக்கு இஷ்டமில்லை. ஆதலின் அது உனக்கு ஏன் என்பதையும், அதனல் எங்களுக்கு எப்படிப்பட்ட கஷ்டமும் விளையாதா என்பதையும் தெரியப்படுத்து" என்று கூறினன். அதற்கு ஜகதீசன், "இதற்கெல்லாம் சமாதானம் கூறிக்கொண்டிருக்க என்னல் முடியாது. ஆனல் ஒன்று நிச்சயமாகக் கூறு வேன். நீங்கள் அப்பிரேதத்தைப் பிடித்துக்கொடுத்ததும் அதற்காக உங்களுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு நான் அதை எடுத்துச்செல்வேன். பிறகு என்னகஷ்டங்கள் வந் தாலும் அது என்னைச்சேருமே யன்றி உங்களைத் துன்புறுத் தாது. என் பேச்சை எவ்வளவுதூரம் நம்பலாம் என்பது பற்றி டாக்டர் மணவாளனையே கேட்டுப்பாருங்கள். அப் படி உங்களுக்கு இஷ்டமில்லையென்ருல் நாளையதினம் நானே அதற்கு வேண்டிய சாமான்களுடன் வந்து அப்பிரேதத்தை இழுப்பேன்" என்று தைரியமாகவும் நிச்சயமாகவும் கூறு கிறேன்.

உடனே அவர்கள் மூவரும் இதைப்பற்றிக் கலந்தாலோசித்தனர். பிறகு வெறியன், 'ஐயா, என்னகஷ்டங்கள் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்வதென்று நிச்சயித்துவிட்டோம்', என்று கூறிக்கொண்டே தன் வேலையில் இறங்கினன். அவனுடன் அவனுடைய தோழர்களும் புறப்பட்டார்கள். அவர்கள் தங்கள் ஆயுதங்களைக்கொண்டு தேட ஆரம்பித்தார்கள். சொற்ப நேரத்துக்கெல்லாம் அவர்களுடைய வலையில் அச்சிறு குழந்தையின் பிரேதம் அகப்பட்டுக்கொண்டது. அதை அவர்கள் கரையில் இழுத்துப்போட்டார்கள். அதைச் சோதித்துப்பார்த்ததில் அது பிளானல் என்னும் ஒருவகை கம்பளித்துணியில் சுற்றப்பட்டிருப்பதையும் கண்டார்கள். உடனே அதை வேறு ஒருதுணியில் சுற்றி ஜகதீசனிடம் கொடுத்துவிட்டனர். அவனும் அதை எடுத்துக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்து டாக்டர் மணவாளன் வீட்டுக்குத் திரும்பினன். இரவில் அதிகநேரம் கழித்து யாரேனும் கதவைத் தட்டினல் மணவாளனே வந்து திறப்பது வழக்கமாதலால் இம்முறையும் ஜகதீசனுக்கு மணவாளனே கதவைத்திறந்தான். ஜகதீசன் உள்ளே சென்றதும், 'நேராக உன்னுடைய இரகசிய அறைக்குச் செல்வோம், வா' என்று கூறினன். அதற்கு மணவாளன், 'வீட்டில் நம் இருவரைத்தவிர அனைவரும் தூங்கிவிட்டார்கள். ஆகையால் அந்த அறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் இப்போது என்ன இருக்கிறது' எனக் கேட்டான். அதற்கு ஜகதீசன், 'அவ்வறையில் சென்ற பிறகு நீயே விஷயத்தை அறிந்துகொள்வாய்' என்று கூறவே மணவாளன், 'ஓஹோ! நான் தெரிந்துகொண்டேன். நீ அந்த மூடர்களைத் தேடிக் கொண்டு சென்றுய்போலும்! அவர்கள் உனக்கு எதையோ பிடித்துக் கொடுத்திருக்கிறுர்கள். இதெல்லாம் என்ன

ஆபத்து? நீ ஏதேனும் கஷ்டங்களைக் கொண்டுவந்து விட்டு விடுவாயோ?'' என்று அச்சத்தால் ஏற்பட்ட நடுக்கத்துடன் கேட்டான்.

அதற்கு ஜகதீசன், "என்னால் உனக்கு எத்தகைய ஆபத்தும் ஏற்படாதென உனக்கு முன்னமே சொல்லியிருக்கிறேனே! எனக்கு நீ செய்யவேண்டிய உதவிகளையெல்லாம் செய்வாயாயின் உனக்கு எப்படிப்பட்ட ஆபத்தும் ஏற்படாது. உனக்கும் எனக்கும் எத்தகைய விரோதமுமில்லையே! ஆகையால் என்னால் உனக்கு ஆபத்து ஏற்படவேண்டிய அவசியமே இல்லை'' என்றான். இவ்வாறு இவர்களிருவரும் சம்பாஷித்துக்கொண்டே யிருக்கையில் ஜகதீசன் தான் கொண்டுவந்த பளுவை அங்கொரு மேஜையின்மீது வைத்து அதை அவிழ்த்தான். அப்பிரேதத்தின் கழுத்தில் ஒரு கைக்குட்டையால் பெரிய கல் ஒன்றைக் கட்டியிருப்பது தெரிந்தது. ஆகவே அவன் அக்கல்லை எறிந்துவிட்டு அப்பிரேதத்தைச் சுற்றியிருந்த பிளானல் என்னும் கம்பளித் துணியை அவிழ்த்தான். அந்தப் பிரேதத்தின் முகம் தாறுமாறாகப் பாழ்பட்டிருந்தது. அதை அதிகமாகத் தொடவும் ஜகதீசன் அருவருப்புக்கொண்டதால் அதை ஓரிடத்தில் வைத்துவிட்டான். பின்னால் அவன் கண்டுபிடிக்கப் போகும் பல விஷயங்களுக்கு இப்பிரேதம் அவசியமாகவே இருந்தது.

பிறகு அவன் அக்குழந்தையின் கழுத்தில் கட்டியிருந்த அந்தக் கைகுட்டை மிக அழுக்காயிருந்ததால் அதைச் சோப் தண்ணீரில் போட்டுக் கசக்கிப்பார்த்ததில் அதன் மூலையொன்றில் அ என்னும் எழுத்து குறி போடப்பட்டிருந்தது. உடனே அவன் மனதில், 'ஓஹோ! அம்புஜம்' என்று நினைத்துக்கொண்டு 'டாக்டரே' இந்தக் கைக்குட்டை இப்

பிரேதத்தின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த தென்பதற்குச் சாட்சியம் தேவையானல் அப்போது நீதான் சாட்சியாக இருக்கவேண்டும்' என்று கூறினன். அதற்கு அவன், 'அப் படிச் சாட்சியம் சொல்வதற்கு எத்தகைய தடையுமில்லே. ஆனல் சாட்சியம் கூறவேண்டிய அவசியம் ஏற்படாதபடி இருக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்' என்ருன். அப்போது ஜகதீசன், 'ஆமாம்! அதில் ஆட்சேப மொன்றுமில்லே. எத்தகைய சங்கதியும் வெளியாகாதபடி நான் பார்த்துக்கொள்கிறேன். இதோ இந்தப் பிரேதத்தைச் சுற்றியிருந்த பிளானல் துணியில் ஏதோ எழுத்துகள் எழு தப்பட்டிருக்கின்றன. அவை என்னவென்று பார்' என்ருன். இருவரும் அதைக் கவனித்துப்பார்த்ததில் 'இர' என்று இரு எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன. அதன் பொருள் என்ன வென்று மணவாளன் கேட்டபோது ஜகதீசன் இரங்கம்மாள் என்ருன். அப்போது டாக்டர் மணவாளன் திடீரென ஏதோ புதுவிஷயம் உணர்ந்தவனேபோல் திடுக்கிட்டு ஜகதீசனைப் பார்த்து, 'அக்குழந்தையை ஈன்றவள் இளவரசி என்பதில் உனக்கு நம்பிக்கை இல்லேயோ' என்று கேட்டான்.

அதற்கு ஜகதீசன், "ஆம்; நான் அதைச் சிறிதும் நம்ப வில்லே. படிப்படியாக நீ இந்த மர்மங்களே அறிந்து ஆச் சர்யப்படப்போகிருய். ஆகவே நீ ஒன்றும் பேசாமல் என் நடவடிக்கைகளில் என்னுடன் ஒத்துழைத்துவா. ஆனல் என்னைக் காட்டிக்கொடுக்கவோ, என்னுடன் ஒத்துழைக் கவோ மறுத்தால் உன் சங்கதிகளே வெளிப்படுத்தி உன்னைத் தண்டிக்கவும் ஏற்பாடு செய்வேன்" என்று மிரட்டினன். அப்போது டாக்டர் மணவாளன் அச்சத்துடன் அவ்வாறே ஜகதீசனுடைய கட்டளேகளுக்குக் கீழ்ப்படிந்து அவனுடன் ஒத்துழைப்பதாகக் கூறியதன்மேல் இருவருமாகச் சேர்ந்து

அப்பிரேதத்தை அங்கிருந்த பீரோ ஒன்றில் வைத்துவிட்டு இருவரும் அவரவருடைய அறைக்குச் சென்றனர். ஜகதீசன் தனியே தன் அறையில் இருந்தபோது, தான் திக்கற்ற இளவரசியின் சார்பாக மேற்போட்டுக்கொண்ட வேலையில் சிறிது சிறிதாக வெற்றிகிடைப்பதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தான்.

186555

128 - வது அத்தியாயம்

ஜகதீசன் இவ்வாறு அநாதையின் பிரேதத்தைக் கொண்டுவந்து டாக்டர் மணவாளன் வீட்டில் பத்திரப்படுத்திய மறுநாட் காலை ஏழரைமணி சுமாருக்கு இரத்தினபுரி இளவரசி தங்கியிருந்த அழகிய மாளிகையின் ஒரு அறையில் மூன்று சகோதரிகள் ஒன்றுகக் கூடினார்கள். அவர்கள் இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய மூன்று சகோதரிகளே என்று நாம் கூறவேண்டியதில்லை. மூத்த சகோதரியாகிய இரங்கம்மாள், பிரசவித்துச் சில வாரங்களே ஆகியிருந்ததால் வெளுத்த தேகத்துடனும் பலஹீனத்துடனும் காணப்பட்டாள். எனினும் அவள் மிகச்சாமர்த்தியமாக வீட்டு வேலைகளையும், இளவரசிக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளையும் காலந்தவறுமலும், வழக்கப்படியும் செய்து வந்ததாலும், மேற்பார்வைக்கு, எத்தகைய கஷ்டமுமில்லாதவள்போல் நடை உடைபாவனைகளைக் காட்டிவந்ததாலும் அவளைப்பற்றி யாரும் எத்தகைய சந்தேகமு மடையமுடியாமல் இருந்தது. இரங்கம்மாள் இவ்வாறு சாமர்த்தியமாகத் தப்பியதற்கு அச்சகோதரிகளுக்குத் துணையாக வந்திருக்கும் இராஜம்மாளென்னும் மாதின் தந்திரங்களே காரணமென்பதில் தடையில்லை. எனினும் சிற்சில சமயங்களில் கூர்ந்து

நோக்குவார்க்கு இரங்கம்மாளின் முகத்தில் துக்கக்குறியும், தேகக் கஷ்டக்குறியும் காணப்படாமற் போகவில்லை. சகோதரிகள் மூவரும் காலையில் எழுந்ததுமே மிக அழகாகத் தங்களை அலங்கரித்துக்கொண்டு மூத்த சகோதரியின் அறையில் கூடியிருந்தார்கள். அவர்கள் அழகுடையவர்களாகவும், சந்தோஷமுடையவர்களாகவும் காணப்பட்டார்களே யொழிய அம்மூவரும் கவலையென்னும் பெரும் சாகரத்தில் மூழ்கியிருந்தனர். எனினும் அதையெல்லாம் அவர்கள் மறைத்துக்கொண்டு பின்வருமாறு சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள்.

ஜானகி:—ஆ! எவ்வளவு அழகான இடம். இதோ இந்த மாளிகையின் பின்னால் விசாலமான வெளி இருக்கின்றது. மாளிகையைச் சுற்றிலும் மனோரம்யமான தோட்டம். மேலும் இந்தப் பிரதேசத்தின் சீதோஷ்ணமே சௌக்கியமா யிருக்கின்றது. இரத்தினபுரியில் குளிர் அதிகம்.

அம்புஜம்:—நிதானமானவனும் நம்பிக்கைக் கிடமுள்ளவனுமான இப்பிரதேசவாசி ஒருவன் உனக்குக் கணவனாக அமர்ந்தால் நீ இங்கேயே தங்கிவிட உண்மையில் விரும்புவாயா?

ஜானகி:—இல்லை. நான் நமது தேசமல்லாத பிரதேசவாசியை மணந்துகொள்ள விரும்பவில்லை.

அம்:—அப்படி யில்லையென்றால் நீ தனியாக சுயேச்சையுடன் ஒரு பங்களாவில் வசிக்கவும், சிற்சில சமயங்களில் உலக இன்பத்தை அனுபவிக்கும் பொருட்டு ஒரு காதலனுடன் இருக்கவும் பிரியப்படுகிறாயோ?

இரங்கம்மாள்:—பிற தேசமாகிய இங்கு தங்குவதாக நினைப்பதே முட்டாள்தனம். இரண்டாவதாக அன்னிய

நாட்டாரை மணந்துகொள்வது சிரமம். அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கும் நம்முடையதுக்கும் வித்தியாசப்படும். மூன்றாவதாக, விவாகமின்றிச் சதாகாலமும் காதலனுடன் வசிப்பதென்பது தகாததகாரியம். இங்கு ஆடவர்கள் நம்முடைய அழகைக்கண்டு ஒருவரோடொருவர் போட்டி போட்டிக்கொண்டு அதனல் நாம் கொலைக்கும் ஆளாக நேரிடும்.

அம்:—நீ விஷயங்களை அதிகப்படுத்திக் கூறுகிருய். இருந்தாலும் எனக்கோ, அல்லது ஜானகிக்கோ இங்கு இருக்கவேண்டுமென்னும் எண்ணமில்லை. வேடிக்கைக்காகப் பேசினேம்.

இரங்:—ஏன்? கூடியவிரைவில் நாம் நமது வேலையையே விட்டுவிட்டு நம்நாடு திரும்பவேண்டிய அவசியம் ஏற்படுமென்று நம்புகிறேன்.

அம்:—உஸ். மெதுவாகப் பேசு; அடுத்த அறையில் இருப்பவர்கள் கேட்டுவிடுவார்கள். நமது வேலை முடிந்த பிறகு நமக்கு என்ன சன்மானம் அளிக்கப்படுமென நினைக்கிருய்! நல்ல பென்ஷனும் பட்டமும் கிடைக்கும்படி இளவரசர் முயற்சி எடுப்பாரல்லவா?

இரங்:—ஆம்; இளவரசர் ஏதேனும் உதவிசெய்வார் என்பதில் சந்தேகமில்லை. அதிருக்கட்டும்; இப்போது நீங்கள் என்னை நான் அலங்கரித்துக்கொள்வதில் உதவி செய்யுங்கள். மணியாய்விட்டது; காலை ஆகாரத்துக்குப் போகவேண்டிய வேலை சமீபித்துவிட்டது.

இவ்வாருகப் பேசிக்கொண்டே இரங்கம்மாள் தன் ஆடை ஆபரணங்களை அணிய ஆரம்பித்தாள். அம்புஜமும் தன் சகோதரி ஆடைகளை அணிவதில் உதவி செய்து

கொண்டே, 'நமது பழைய நண்பன் ஜகதீசனுடைய கதி என்ன ஆயிற்றோ தெரியவில்லை. அவன் முன்பு நம்முடன் பரிதிபுரம் வந்தானல்லவா? அவனைச் சிறையிலிட்ட பின்னர் என்ன நடந்தது எனத் தெரியவில்லை,' என்றாள். அதற்கு இரங்கம்மாள், 'இல்லை, இல்லை. அவன் விடுதலை யடைந்திருக்கமாட்டான். விடுதலை யடைந்திருந்தால் அவன் எங்கேபோனாலும் மறுபடியும் இங்கு வருவான். அவனைப் பற்றிய சங்கதிகள் நமக்கு எட்டாமற்போகாது. அவனை நாம் மயக்க முயன்றோமல்லவா? சந்தேகமென்ன? நாம் மூவரும் மிக்க அழகுடையவர்கள் என்று பெயர் வாங்கிவிட்டோம். ஏன்? நமது தங்கை மீனம்பாள் உள்பட நாங்கள் நால்வரும் அழகுடையவர்களென நமது சொந்த ஊரில் பெயர் பெற்றோம்,' என்று கூறினாள்.

அதைக்கேட்ட அம்புஜம், 'சகோதரி மீனம்பாள் அந்தக் கந்தபுரியில் கோமளவல்லியின் வீட்டில் அடைபட்டுக் கிடப்பதைவிட நம்முடன் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். அவளும் எங்களுடன் இல்லையே என்று நான் விசனப்படுகிறேன். அவள் இன்னும் அங்கேதான் இருப்பதாகத்தானே அம்மா கடிதம் எழுதியிருந்தாள்' என்றாள்.

அதற்கு இரங்கம்மாள், 'மீனம்பாளைப்பற்றிக் கவலைப் படாதே. அவள் ஒருமாதிரி குணமுடையவள். ஏதோ கற்பைப்பற்றிப் பிரமாதமாக நினைத்துக்கொண்டிருக்கிறாள். அது கிடக்கட்டும். நாம் ஜகதீசனைப்பற்றி யல்லவோ பேசிக்கொண்டிருந்தோம். நம்முடைய இவ்வளவு பெரிய சம்பாஷணையில் நாம் மாரப்பனையும் குமாரவேல்பிரபுவையும் மறந்துவிட்டதன் காரணமென்ன?' என்று சிந்தித்துக்கொண்டே கேட்டாள். அப்போது அம்புஜம் ஆத்திரத்துடன், 'என்ன! அவர்கள் அவ்வளவு மோசடியும் சூழ்ச்சியும் செய்த பின்னருமா அவர்

களைப்பற்றி நினைப்பது? நம்மை அடியோடு தூக்கிக்கொண்டல்லவோ போய்விட முயன்றார்கள். அதிலும் பிணத்தை இழுக்கும் வெறியனுடைய கூட்டத்தைக்கொண்டு நம்மைத் தூக்கிச்செல்ல முயன்றார்களல்லவா? ஐயோ பாவம்! இராஜம்மாள், வண்ணாத்தி சுவர்ணம் இவர்களின் நிலைமைக்கு இரங்குகிறேன். அவர்களுடைய புடவையும் பிணநாற்ற மடிக்கும்? என்று கூறினாள். இரங்கம்மாள் சிரித்துக்கொண்டே, 'அவர்களுக்கு நேர்ந்த சம்பவத்தைப்பற்றி நினைக்கும் போதே எனக்குச் சிரிப்பு வருகிறது' என்று கூறினாள்.

அம்பு:—இவர்களைக் கண்டதும் கர்னல் மாரப்பன் திக்பிரமையடைந்திருப்பான். அவனுக்கு வேண்டியதுதான். அவனுடைய சூழ்ச்சிக்கு அதுவே தக்க தண்டனையாகும். அதைப்பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம்.

ஜானகி:—பாவம்! குமாரவேல்பிரபு. அவன் தனக்கு என்னிடமிருக்கும் காதல் காரணமாகவே தூக்கிச்செல்ல முயன்றதால் உண்மையிலேயே அவனுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைக் கண்டு நான் வருந்துகிறேன்.

இரங்:—ஜானகி! நீ மறுபடியும் தற்செயலாய் குமாரவேலைக் காணநேர்ந்ததால் அவனை நீ மன்னித்துவிடுவாய் என்றே நான் நம்புகிறேன்.

அம்:—ஆம்; அவள் மன்னித்துவிடுவாள். ஆனால் நான் கர்னல் மாரப்பனைச் சந்திப்பேனாயின் மன்னிக்கவே மாட்டேன்.

ஜான:—இல்லை. நானும் குமாரவேலரை மன்னிக்கவேமாட்டேன். நீங்களிருவரும் என்னை மனோதிடமற்றவள் என்று நினைக்கிறீர்கள்போலும்! நானும் உங்களிருவரைப்போலவே மனோதிடமுள்ளவளாயும், புத்திசாலியாயும் இருக்கிறேன். நான் மறுபடியும் குமாரவேல்

பிரபுவைச் சந்திப்பேனுயின் நிச்சயமாகவும் தெளிவாக வும் அவரிடம், இனி எனக்கும் அவருக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை என்று கூறிவிடுவேன். ஆனல் அம்புஜம்! நீ கர்னல் மாரப்பனை அலட்சியம் செய்து விடுவது மிகச்சுலபம். ஏனெனின் இப்போது நீ மற் ருெருவனை உன் காதல்வலையில் இழுக்க முயற்சித்துக் கொண்டிருக்கிருய் அல்லவா? நமது இளவரசியின் காரியஸ்தரை நீ மயக்கிவருகிருய் என்பதை நான் அறிய மாட்டேன் என்று நீ நினைக்கிருயோ?

இரங்:—என்ன பலராமனையா? ஓ! அதுதான் சில தினங்க ளாக அம்புஜமும் பலராமனும் ஆகாரவேளையில் பக்கத் தில் உட்காருகிருர்களோ! மேலும் அவர்கள் இப் பால் அடிக்கடி சந்தித்துப்பேசுவதையும் நான் கண் டிருக்கிறேன்.

அம்:—கவனியுங்கள். நான் உண்மையைச் சொல்லிவிடு கிறேன். நாம் பரஸ்பரம் இரகசியங்களை மறைத்து வைத்துக்கொள்வது வழக்கமாக இல்லாமலிருந்தும் நான் இச்சங்கதியை மட்டும் உங்களிடம் சொல்லாம லிருந்ததன் காரணம் யாதோ தெரியவில்லை. உண்மை யில் நானே பலராமனுடைய காதலுக்கு இரையானத் தால் அவரை மயக்க முயற்சித்துவருகிறேன். நான் எனக்கு அவர்மீதுள்ள காதல் காரணமாகத்தான் சிற் சில சமயங்களில் அவரைப்போலவே உடைகளை அணிந்துகொள்வது வழக்கம். அப்போது நானே அவரைப்போல் இருப்பதாக நினைத்துக்கொண்டு சந் தோஷப்படுவதுண்டு. உண்மையிலேயே அவர் ரூபலா வண்யமுடையவராக இல்லையா?

அப்போது அம்புஜம் கேட்ட மாதிரியைக்கண்டு மற்ற இருசகோதரிகளும் 'கொல்' என்று சிரித்துவிட்டனர். அவளும் சிரித்தாள். அச்சமயம் மூன்று அழகிய சகோதரிகளும் சந்தோஷமாகச் சிரித்துக்கொண்டிருந்தபோது அங்கு எப்படிப்பட்ட மனோ உறுதியையுடைய ஆடவர்கள் சென்றிருந்தாலும் அவர்களைக் கண்டு மயங்கி யிருப்பார்களென்பதில் ஆட்சேபமில்லை. ஆனால் காலையில் அழகாகத் தோன்றும் ரோஜாமலர் மாலைக்குள் வாடி வதங்கிப்போவதைக் கவனிப்பார் யார்?

இரங்:—அவ்வாறுயின் நீ பலராமனை நேசிக்கிறுய் என்று நாங்கள் நினைப்பதா?

அம்:—ஆம்; நான் முன்பு ஒருமுறை ஜகதீசனை நேசித்தது போலவே இப்போது பலராமனை நேசிக்கிறேன். அல்லது கர்னல் மாரப்பனை நேசித்ததுபோலவே இவரையும் நேசிக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். எப்படி யிருந்தாலும் ஒரு காதலன் இல்லாமல் காலத்தைக் கழிக்க என்னுல் முடியாது.

இரங்:—ஓ! நீ ஏன் பலராமனை நேசிக்கிறுய் என்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். எனினும் இப்படிப் பலரையும் நேசிப்பது தவறு. பிறகு அவர்களைவிட்டுப் பிரியமனமில்லாமல் மிகக்கஷ்டமான வாழ்க்கை ஏற்பட்டுவிடும்; ஆதலின் ஜாக்கிரதையாயிரு.

அம்பு:—'சரி! எனதன்புள்ள சகோதரியே! அதைப்பற்றி ஆபத்து வரும்போது பார்த்துக்கொள்ளலாம். இதற்குள் நீ ஏன் அவசரப்படுகிறுய். மேலும் பலராமனே இன்னும் என் கைக்குக் கிட்டிவிடவில்லை. நான் அவரை நேசிக்கிறேன் என்பதையே அவர் கவனிப்பதில்லை.

அவர் ஒருமாதிரி சாது அல்லவா? என் கையை மெது வாக அவர்மீது போட்டால் அது அவரை அழுத்துவ தில்லை. நான் அவரை உற்று நோக்கும்போது அவர் என்னைக் கவனியாது கீழே பார்க்கிறார். மேஜையினடி யில் என்கால் அவர் காலில் படும்போது, அவர் காலே எனக்குத் தெரியாமல் பட்டதாக நினைத்து மன் னிப்பு கேட்கிறார்.

இரங்:—இதென்ன வேடிக்கை! இதுவும் ஜகதீசனுடைய செயல்கள்போலவே இருக்கின்றது. முதலில் நாம் அவ னுடன் வண்டியில் பிரயாணம் செய்தபோது அவன் இப்படித்தானே நடந்துகொண்டான். ஆயினும் பல ராமன் கடைசிவரை உறுதியாக இருக்கமாட்டான். இவ்வுலகில் அவ்வாறு உறுதியாக இருக்கக்கூடிய நல் லொழுக்கமுடையவன் ஜகதீசன் ஒருவனே என்பது என் அபிப்பிராயம்.

அம்பு:—எப்படியாவது பலராமனைக் கைப்பற்றவே நினைத் திருக்கிறேன். அதிருக்கட்டும், இம்மாளிகையில் இருக் கும் நம்மனைவரும் பார்ப்பதற்குத் தனியாக ஒரு நாடக மேடையை அமைப்பதாக இளவரசி தெரிவித்தாளே அது என்ன ஆயிற்று.

ஜானகி:—அதைப்பற்றி இளவரசியார் கவனம் செலுத்து வார் என நான் நினைக்கவில்லை.

அம்பு.—ஆமாம்! எனக்கும் ஞாபகத்துக்கு வருகிறது. அவ ருடைய கணவனான இளவரசர் இரத்தினபுரியில் தம் மாளிகையில் அடிக்கடி நடனமாடுவதாக இளவரசிக்குத் தெரிவதால் அவர் இங்கு அவரைப்போலவே வாழ்க் கையை நடத்தப் பிரியப்படமாட்டார். ஆதலின் அந்த எண்ணம் மறந்துவிடவும் கூடும்.

ஜானகி:—நாம் நேற்று வெளியில் உலாவிவிட்டுத் திரும்பி வந்தபோது இளவரசி இரத்தினபுரியி லிருந்து வரும் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். நானும் அப் பத்திரிகைகளைக் கவனித்திருக்கிறேன். அங்கு இளவரசரின் மாளிகையில் அடிக்கடி நாடகம் நடைபெறுவதையும் அதில் பலமாதர்கள் கூடுவதையும் பற்றிக் கண்டிருக்கிறேன். அங்கு மதனவல்லி, ஏகநாயகிச் சீமாட்டி, பெரியநாயகிச் சீமாட்டி முதலியோர் கூடுகின்றனர்.

அம்பு:—அம்மாதர்களின் பெயர்களையெல்லாம் வரிசையாக அடுக்கவேண்டாம். நாம் எத்தனையோமுறை அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். மேலும் இளவரசரின் அம்மாளிகைக்கு விஜயம்செய்யும் ஒவ்வொரு மாதையும் நமது இளவரசி தனது சொந்த விரோதியாகவே கருதுகின்றாள்.

இரங்:—ஆம்; அதெல்லாம் மெய்தான்—ஆனால் அதைப்பற்றி நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமென்ன? நமது விஷயத்தை நாம் கவனிப்போம்.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது அங்கிருந்த கடிகாரமொன்றில் எட்டரை மணி ஆயிற்று. அப்போது அவர்கள் இனியும் பேசிக்கொண்டிருக்கலாகாதென நினைத்து காலை ஆகார அறைக்குச்சென்றனர்.

129 - வது அத்தியாயம்

இரத்தினபுரி இளவரசியின் மாளிகையில் மூன்று சகோதரிகளும் முன் அத்தியாயத்தில் கூறியபடி பேசிக்கொண்டிருந்த அதேதினம் பகல் இளவரசி அம் மாளிகையைச் சுற்றியுமிருந்த தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தாள். இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய மூன்று சகோதரிகளும் இளவரசியின் தோழிகளாக உடன் சென்று கொண்டிருந்தனர். பலராமனும் இளவரசியின் காரியஸ்தர் என்னும் முறையில் இளவரசியுடன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். அப்போது இளவரசிக்கு வயது நாற்பத்தைந்து அவள் ஸ்தூல சரீரமுடையவளாயும், முதிர்ந்த தோற்றமுடையவளாயும் காணப்பட்டாள். ஆயினும் அவள் அழகுடையவளாகவும், சந்தோஷ முடையவள்போலவும் தோன்றினாள். அவள் கணவன் அவளை விலக்கிவிட்டிருந்ததனாலும், அவளைப் பல கஷ்டங்களுக் காளாக்கியதாலும் அவள் விசனத்துள் மூழ்கியவளாய் இருந்தும் இளமைப் பிராயம் முதலே வழக்கமாகப் புன்சிரிப்புகொள்வதேபோல் சதா புன்சிரிப்புடனும் நல்ல குணமுடையவளாகவும் இருந்தாள். ஆயினும் இரத்தினபுரியிலுள்ள மாதர்கள் மட்டும் இந்த இளவரசியின்மீது இல்லாத பழிகளையெல்லாம் சுமத்தி வந்தார்கள்.

பலராமனுக்கு அச்சமயத்தில் வயது முப்பத்தெட்டு. அவன் மிக்க ரூபலாவண்யமுடையவனா யிருந்தான். அவன் சதா சர்வகாலமும் கறுப்பு உடை அணிவதிலேயே பிரிய முடையவன். சதா ஆழ்ந்த சிந்தனையில் புத்தியைச் செலுத்திக்கொண்டிருப்பான். பொதுவாக அவன் ஒரு கண்ணியம்

வாய்ந்த பெரிய மனிதன் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவன் எந்த விஷயத்தைப்பற்றியும் தெளிவாகவும் உறுதியாகவும் நாவன்மையுடனும் பேசும் சக்தியுடையவன். இளவாசியின் விஷயத்தில் மிகக் கண்ணியமாக நடந்துகொள்வான். அவளை அவன் இளமைப்பிராயம் முதலே அறிந்தவனுயிருந்தாலும் சமூக அந்தஸ்தில் தனக்கும் அவளுக்குமிடையில் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறதென்பதை உணர்ந்திருந்தான். எந்தச் சமயத்திலும் அவன் மட்டும் தனியாக இளவரசியுடன் இருந்ததேயில்லை. இளவரசியின் கூட்டத்திலிருந்து இதரர்கள் செல்வதற்குமுன் அவனே சென்றுவிடுவது வழக்கம்.

இளவரசியும், பலராமனும், தோழிகளும் இரத்தினபுரியில் நடந்துகொண்டிருப்பதாகத் தாங்கள் பத்திரிகையில் கண்ட எதோ ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே தோட்டத்தில் மேலும் கீழுமாக உலாவிக்கொண் டிருந்தார்கள். அச்சமயத்தில் அம்மாளிகையின் சேவகன் ஒருவன் இளவரசியின்முன் பணிந்து நின்று, "இரத்தினபுரியிலிருந்து வந்திருக்கும் ஒருமாது தங்களை நேரில் கண்டுபேச விரும்புகிறார். அம்மாதை அனுமதிக்கலாமா?" என்று கேட்டான். இளவரசியைத் தங்களுக்கும் தெரியாமல் யாரும் பார்த்துவிடலாகாதென்பதில் அதிக ஜாக்கிரதையுடன் அந்த மூன்று சகோதரிகளும் நடந்துகொள்வது வழக்கமாதலால், அவர்களில் மூத்தவளான இரங்கம்மாள் அச்சேவகனைப் பார்த்து, "அந்த மாது கொடுத்திருக்கும் அறிமுகச்சீட்டை இங்கே கொடு. நான் அதை இளவரசியிடம் தருகிறேன்" என்று கூறினள்.

அதற்கு அச்சேவகன், "அம்மாது அறிமுகச்சீட்டையும் கொடுக்கவில்லை. தன் பெயரையும் சொல்லவில்லை; ஆனல்

அவளை அனுமதிப்பதில் ஏதேனும் சந்தேகம் ஏற்படுமாயின், இதோ இந்தக் கடிதத்தை இளவரசியினிடம் கொடுத்து விடும்படி கூறியிருக்கிறாள்'' என்று சொன்னான். அப் போது அத்தகைய மாளிகையில் சகஜமாக நடைபெறும் வழக்கம்போல் தோழிகளில் மூத்தவளான இரங்கம்மாள் அச்சேவகனிடமிருந்து அக்கடிதத்தைப் பெற்றாள். உடனே அக்கடிதத்தைக் கிழித்துப்பார்த்து அதிலுள்ள விஷயத்தைப் படித்துப் பார்த்தாள்.

பிறகு, 'முக்கியவேலையாக யாரும் வரவில்லை. வெறும் ஏமாற்றலும், வேஷமுந்தான். ஆதலின் இளவரசியே! தாங் கள் இந்த வேண்டுகோளுக்கு அனுமதியளியா திருப்பதே நலம்,' என்று இரங்கம்மாள் இளவரசியினிடம் கூறினாள். அதற்கு இளவரசி, 'சரிதான். அந்தக் காகிதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? அம்மாது யார்? அவள் என்ன ஏமாற்றப் பார்க்கிறாள் என்று நீ நினைக்கிறாய்?' என்று கேட்டாள்.

அதற்கு இரங்கம்மாள், 'ஆம்; அவள் ஒரு பெரிய வேட தாரியே என்பதில் சந்தேகமில்லை. தாங்கள் தாராளமாக நடந்து கொள்வதால் கண்டவர்களெல்லாம் ஏதோ ஒரு கார ணம் சொல்லிக்கொண்டு இவ்விடம் தங்களைக்காண வந்துவிடு கிறார்கள். நான் இப்போது அவளைக்காணத் தங்களுக்கு அவகாசமில்லையென்று சொல்லி அனுப்பி விடட்டுமா?' என்று கேட்டாள். சாதாரணமாக இளவரசி நல்லெண்ண முடையவளாகவும், தன்னிடம் வேலைசெய்யும் மாதர்களின் இஷ்டப்படி நடக்கவேண்டுமென்பதில் பிரியமுடையவளா யும் இருப்பவளாதலால் இரங்கம்மாள் கூறிய யோசனையை ஆதரிப்பவள்போலவே காணப்பட்டாள். ஆனால் தற்செய லாகத் திடீரென்று அவள் மனதில் அக்கடிதத்தைத் தானே

பார்க்கவேண்டுமென்னும் எண்ணம் உதித்தது. ஒருகால் புதிதாக வந்தமாது இளவரசியைக் காணலாகாதென்னும் ஆத்திரத்தில் இரங்கம்மாள் மிதமிஞ்சித் தன்னடக்கமின்றி நடந்துகொண்டிருக்கலாம். அதனால் இளவரசிக்குச் சந்தேகம் ஏற்பட்டு இதில் ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென நினைத்து அவள்தானே அக்கடிதத்தைக் காண விரும்பியிருக்கலாம். எந்தக் காரணமாக இருந்தாலும் சரி; அவள் எப்போதுமில்லாதவகையில் அன்று உறுதியாக நின்று, 'அக்கடிதத்தை என்னிடம் கொடு' என்று கேட்டாள்.

இரங்கம்மாள் உடனே கொடுக்கத் தவறவில்லை. அவ்வாறு கொடுக்க அவளுக்கு இஷ்டமில்லையென்றாலும் கொடுக்காமலிருப்பது தவறு என்று உணர்ந்த அவள் உடனே அதை இளவரசியினிடம் கொடுத்துவிட்டாள். இளவரசியும் அதைப் படித்துப்பார்த்ததில் அதில் பின்வருமாறு காணப்பட்டது:—

"கனம் தங்கிய இளவரசி அவர்களே! இக்கடிதத்தை எழுதும் மாதாகிய நான், தங்கள் குமாரியாகிய சண்பகவல்லியுடன் பழகி இருக்கிறேன். மேலும் அத்தை சுந்தராங்கியையும் நான் நன்றாக அறிவேன். நான் அத்தை சுந்தராங்கியிடமிருந்து ஒரு முக்கியமான கடிதத்தை தங்களிடம் கொடுக்க வந்திருப்பதால் நான் தங்களை நேரில் காணுமாறு எனக்கு அனுமதி அளிக்கவேண்டும். அக்கடிதத்தைத் தங்கள் கையிலேயே கொடுப்பதாக நான் வாக்களித்திருப்பதால் தங்களை நேரில் காணவேண்டியது அவசியமாக இருக்கிறது. நான் இதில் **ஏன்** என் பெயர் எழுதவில்லையென்றால் அதற்கும் தக்க காரணமிருக்கின்றது. என்னை நேரில் அனுமதிக்கும்போது எல்லாவற்றையும் நேரில் விவரித்துக் கூறுவேன்."

மேற்படி கடிதத்தைப்படித்துப்பார்த்த இளவரசி, இரங்கம்மாளைப் பார்த்து, "இக்கடிதம் எழுதியிருக்கும் மாதைப் பற்றி நீ அவ்வளவு கேவலமாக நினைப்பதற்குக் காரணமென்னவென்று எனக்குத் தெரியவில்லை. அவள் பிச்சை எடுப்பதற்காக என்னைப்பார்க்க விரும்புகிருள் என்று நினைப்பதற்கு ஆதாரமே இல்லையே" என்று கூறினுள். அதற்கு இரங்கம்மாள், "பிச்சை கேட்க வருபவர்களும் இப்படித் தான் இல்லாத கதையையெல்லாம் எழுதுவது வழக்கமென்பது தங்களுக்குத் தெரியாமல் இராது," என்று நிதானமாகக் கூறமுயன்ருள். அப்போது இளவரசி மிக்க ஆத்திரத்துடன், "பிரஸ்தாப விஷயத்தில் அவ்வாறு கருத இடமில்லை என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்" என்றுகூறவே இரங்கம்மாள் அதைப்பற்றித் தனக்குக் கவலை இல்லாதவள்போலவும், இளவரசி எப்படி வேண்டுமாயினும் செய்துகொள்ளலாம் என்று கருதுபவள்போலவும், "என் எண்ணம் நல்லதேயாயினும் தங்களுக்கு இஷ்டமில்லையென்ருல் நான் ஏன் அதைச் சொல்லவேண்டும்" என்று கூறிக்கொண்டே நீலிக்கண்ணீர் வடித்தாள்.

அதைக்கண்ட தாராள நோக்கமுடைய அவ்விளவரசி இரங்கம்மாள் கண்ணீர்வடிப்பதைக் கண்டு இரக்கங்கொண்டு, "எனதன்புள்ள பெண்ணே! நான் உன் நல்லெண்ணத்தில் சிறிதும் சந்தேகம் கொள்ளவில்லை. அல்லது உன் மனதைப் புண்படுத்தவும் நான் விரும்பவில்லை" என்று கூறினுள். இது தான் சமயமெனக் கருதிய இரங்கம்மாள், "எனக்குத் தங்களிடம் உள்ள அன்பினுலும் மரியாதையினுலும் தான் எப்போதுமே நான் தங்கள் விஷயத்தில் நல்லெண்ணமுள்ளவளாகவே நடந்துகொண்டு வருகிறேன். ஆனுல் இப்போது வந்திருக்கும் அம்மாதைத் தாங்கள் காண்பது என நிச்சயித்திருந்தால் என்னை அனுப்பினுல் நான்போய் அவளைப்

பரிசோதித்து அவள் தங்களைக்காண அருகதை யுடையவள்தானு என்று கண்டு கொள்கிறேன்,'' என்றுகூறினுள்.

அதற்கு இளவரசி, 'அவள் யாராயிருந்தாலும் சரிதான். நான் அவளைப் பார்த்தே ஆகவேண்டும்,' என்று கூறிக்கொண்டே சேவகனைப் பார்த்து, 'நீ போய் அந்த மாதை இங்கே அழைத்துவா. அவளை இங்கேயே பார்த்துப் பேசுவேன்' என்று கட்டளையிட்டாள். அப்போது இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி ஆகிய மூவரும் ஒருவரையொருவர் பார்த்து தங்களுக்கு ஏதோ ஆபத்து வருவதாகத் தோன்றியிருப்பதாக சமிக்ஞை செய்துகொண்டனர். ஆயினும் அவர்கள் அதிக விரைவில் அவ்வாறு செய்துகொண்டதால் அதை இளவரசியோ அல்லது பலராமனே பார்க்கவில்லை. இதற்குள் இளவரசியும் அத்தோட்டத்தில் நடைப்பாதையில் ஆங்காங்கே போடப்பட்டிருந்த இரும்பு பெஞ்சியின்மீது உட்கார்ந்துகொண்டாள். இரங்கம்மாள் இளவரசியின் வலது கைப்பக்கம் நின்ருள். அம்புஜம், ஜானகி, பலராமன் ஆகிய மூவரும் இளவரசியின் பின்புறத்தில் உட்கார்ந்தார்கள். அப்போது சிறிதுநேரம் யாரும் பேசவில்லை. எல்லாரும் மௌனமாய் இருந்தனர். இளவரசிமட்டும் மற்றொருமுறை அக்கடிதத்தைப் படித்துப் பார்த்தாள். இதற்கிடையில் இரங்கம்மாளும் ஏதோ ஆபத்து ஏற்படுமென்றும், அப்போது அதிக சாமர்த்தியமாய் நடந்துகொள்ளவேண்டி யிருக்குமாதலின் தைரியம் முதலியவற்றைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

சேவகன் திரும்பிவருவதைக் கண்ட அனைவரும் அவனுக்குப் பின்னல்வரும் மாதைப் பார்ப்பதிலேயே தம் கவனத்தைச் செலுத்தினர்கள். அவளைப் பார்த்தால்

அவள் பிச்சை எடுக்க வருபவள் என்று சொல்லமுடியாம லிருப்பதை மூன்று சகோதரிகளும் உணர்ந்தார்கள். அவள் மிக்க அழகு வாய்ந்தவளாயும், நல்ல குடும்பத்தில் தோன் றியவளாயும், சிலாக்கியமான நடை உடை பாவனைகளையுடை யவளாகவும் காணப்பட்டாள். அம்மாது இளவரசியை அணு கியதும் தன் முகமூடியை அப்புறப்படுத்தி இளவரசியின் எதிரில் நின்றாள். அப்போது அவளுடைய உருவம் தங்கப் பிரதிமைபோல் அழகுள்ளதாக இருந்தது. இளவரசிக்கு, அம்மாதை இதற்குமுன் பார்த்திருப்பதுபோல் ஞாபகம் வரு கிறதே யொழிய அவள் யாரென்று தெரிந்துகொள்ளக்கூடிய ஞாபகம் வரவில்லை. இரங்கம்மாளுக்கும் அவளது சகோ தரிகளுக்கும் அம்மாது யாரென்று தெரியவேயில்லை. ஆனால் அவள் இளவரசியைக் கூர்ந்து நோக்கியதிலிருந்து ஒருகால் இருவரும் நட்பினராகிவிடுவரோ என்று அஞ்சினர்.

அம்மாதை அழைத்துவந்த சேவகன், அவளை இள வரசியின்முன் விட்டுவிட்டு சிறிதுதூரத்தில் சென்று நின் றிருந்தான். அம்மாதோ இளவரசிக்கு வணக்கம் செலுத்தி விட்டுத் தானாக ஒன்றும்பேசாமல் இளவரசி ஏதேனும்பேச ஆரம்பிப்பாளோ என்று எதிர்பார்த்துக்கொண்டே மிகப் பணிவுடன் ஒருபக்கம் நின்றாள். அவள் நடந்துகொண்ட விதத்தைப்பார்த்தால் இப்படிப்பட்ட இராஜ குடும்பங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை நன்கு அறிந் தவளெனப் புலப்பட்டது. அப்போது இளவரசி அவளைப் பார்த்து, "மாதே! உன்னுடைய கடிதத்தை நான் மிக்க கவனத்துடன் படித்துப்பார்த்தேன். நீ ஏதோ கடிதம் வைத்துக்கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறாயே; என்னசங் கதி?" என்று கேட்டாள்.

அப்போது அங்கே நின்றுகொண்டிருந்த இரங்கம்மாள் ஒன்றிரண்டு அடி முன் வந்து, "இளவரசியே! முறைப்படி அறிமுகம் நடக்கட்டும். முதலில் அம்மாது யார் என்பதைப் பற்றிய அறிமுகச்சீட்டை என்னிடம் கொடுக்கட்டும்; அதை நான் தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்" என்று கூறினாள். உடனே அவள், அங்கே நின்றிருந்த மூன்று சகோதரிகளையும் பார்த்து அவர்கள் இன்னாராகத்தான் இருக்கவேண்டுமெனத் தெரிந்துகொண்டு, "சந்தோஷத்துடன் நான் என் அறிமுகச்சீட்டைக் கொடுப்பேன்; ஆனால் என் பெயர் இன்னதென்று தெரிவதாலேயே நான் வந்த நோக்கம் பாழ்படலாகாது. ஆகவே அப்படியில்லையென்று நீங்கள் கூறுவீர்களாயின் உடனே அறிமுகச்சீட்டைக் கொடுப்பேன்" என்று அங்குள்ள அனைவருக்கும் கேட்கும்படி சொன்னாள்.

அப்போது இரங்கம்மாள் சிறிது அதிகாரதொனியுடன், 'மாதே! உனது அறிமுகச் சீட்டு எங்கே? புதிதாக வரும் மாதின்பெயர் என்று முறைமைப்படி தெரிவதற்கு முன் யாரும் இளவரசியுடன் நேராகப் பேசலாகாது' என்று கூறினாள். அப்போது அம்மாது இரங்கம்மாளை லட்சியம் செய்யாமல் இளவரசியைப் பார்த்து, 'இதோ நான் கொண்டு வந்திருக்கும் கடிதத்தைத் தாங்களே பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறிக்கொண்டே இடுப்பிலிருக்கும் அக்கடிதத்தை எடுப்பதற்காகத் தன் கையைத்தூக்கினாள். அச்சமயம் இரங்கம்மாள், 'மாதே! உன் அறிமுகச் சீட்டைக் கொடு' என்று இன்னும் அதிகார தோரணையுடன் கூறிக்கொண்டே தான் கேட்கும் சீட்டைப் பெறுவதற்காகக் கையை நீட்டினாள்.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த இளவரசி, அம்மாது தன்பெயரைக் கூற மறுப்பதால் அவளிடம் சந்

தேகங்கொண்டு, 'ஆம்; மாதே! நீ உன் பெயரைத் தெரிவிக்கவேண்டும். அப்படி உன் பெயரைத் தெரிவிப்பதால் நீ வந்த காரியம் கெட்டுப்போகாதென நான் உறுதிகூறுகிறேன். நீ அவ்வாறு சந்தேகப்படவேண்டியதன் காரணம் எனக்குத் தெரியவில்லை. எனினும் எப்படியிருந்தாலும் உன் நோக்கம் நிறைவேறுமற் போகாது. ஆதலின் வெட்கமின்றி உன் பெயரைச்சொல்' என்று கூறினாள். ஆனால் இளவரசி இவ்வாறு பேசிக்கொண் டிருக்கும்போதே அம்மாதின் முகத்தில் ஒருவகை வெட்கக்குறி தோன்றி மறைந்தது. அதை இரங்கம்மாள் பார்த்துவிட்டாள். அப்போது இரங்கம்மாள், 'இந்த மாது தன்னுடைய பெயரைச்சொல்லத் துணிவில்லையாதலின் அவள் உடனே இந்த இடத்தைவிட்டு அப்புறம் செல்வதுதான் ஏற்றதாகும்,' என்று அதிகாரதொனியுடன் கூறிக்கொண்டே கையாலும் அப்புறம் செல்லும்படி சமிக்ஞைசெய்தாள். இரங்கம்மாள் இளவரசியின் தோழிகளில் மூத்தவள் என்னும் முறையில் தன் கடமையைச் செய்துகொண்டிருந்தாள். புதிதாக வந்தமாது தன் பெயரை யாவது சொல்லவேண்டும் அல்லது அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட வேண்டுமென்றுதான் அவள் கேட்கிறாள். இதை அந்த மாதும் உணர்ந்துகொண்டாள்.

186555

இளவரசியும் இரங்கம்மாளை அவள் இஷ்டப்படி நடந்துகொள்ள அனுமதிப்பவளேபோல அச்சமயத்தில் மௌனம் சாதித்திருந்தாள். ஆகவே அவள் யோசனைசெய்து கடைசியில், "நான் என் அறிமுகச்சீட்டைக் கொடுக்கத் தாமதித்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும். இதோ சீட்டு இருக்கிறது" என்று கூறிக்கொண்டே சீட்டைக் கொடுத்தாள்.

மனமோகினி

ஓர் மாசாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அப்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 5-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	..	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 4-பாகமும் ...	8	4	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	12
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2 பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தலிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6. லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.